விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 27 செவ்வாய்க்கிழமை (09.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 052

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## கொரோனாத் தொற்றால்
# யாழில் முதலாவது நபர் உயிரிழப்பு
### வடக்கின் நான்காவது கோவிட் மரணம்

*(யாழ்ப்பாணம்)* கொரோ்னா வைரஸ் தொற்றால் யாழ்ப்பாணத்தில் முதலாவது நபர் நேற்று உயிரிழந்துள்ளார்.

தீவகம் வேலணையைச் சேர்ந்த 73 வயதுடைய நோயாளி ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். அத்துடன் வடக்கின் நான்காவது கோவிட் - 19 மரணம் இதுவாகும்.

*(19ஆம் பக்கம் பார்க்க)*

இம்மாதம் 24 25ஆம் திகதிகளில்
## யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக் . கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு ▷19

சுமந்திரனுக்கு வழங்கப்பட்டிருந்த
## விசேட அதிரடிப்படை பாதுகாப்பு நீக்கம்

(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. ▷19

நெடுந்தீவில் கைதான
## 9 இந்திய மீனவர்களும் விடுதலை

(யாழ்ப்பாணம்)
நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 9 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ▷19

## யாழில் நேற்று ஒருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று திங்கட்கிழமை 379 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனை ▷19

## தென்னிந்தியாவின் பாதுகாப்புக்கு
# உச்ச அதிகாரப் பகிர்வு தமிழருக்கு வேண்டும்
## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்



*(யாழ்ப்பாணம்)*
**இந்தியாவின் தெற்குப் பகுதி பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் உச்சபட்ச அதிகாரப் பகிர்வுடன் ஆட்சி செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த கேள்வி - பதில் அறிக்கையிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**கேள்வி:** கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்குவதில்லை என்று அமைச்சரவையில்எடுத்துள்ள முடிவு பற்றிய ▷19

தோட்டத் தொழிலாளர்களுக்கு
## 1000 ரூபாய் வழங்க நிபந்தனையுடன் இணக்கம்

(கொழும்பு)
பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபாய் வழங்கப் பட வேண்டும் என்ற தீர்மானம் சம்பள நிர்ணய சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. ▷19

## தமிழ் மக்களின் எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டோருக்கு எதிராக
### நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(முல்லைத்தீவு)
பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மாபெரும் மக்கள் எழுச்சி பேரணியில் பங்கேற்றவர்கள் தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்வதற்காக முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் புதிய B அறிக்கையொன்று நேற்று திங்கட்கிழமை ▷19

## தமிழர்களின் பேரணி ராஜபக்ஷவுக்கு நெருக்கடி
### உதய கம்மன்பில

(கொழும்பு)
பொத்துவில் முதல் பொலிகண்டி வரையில் இடம்பெற்ற பேரணியானது ராஜபக்ஷ அரசை சர்வதேச மட்டத்தில் நெருக்கடிக்குள் தள்ளும் சதி முயற்சி என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச் ▷19

கொரோனாவால்
## 9 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற் ▷19

ஜெனிவாவுக்கு வியூகம்
## கோட்டா தலைமையில் இன்று கலந்துரையாடல்

(கொழும்பு)
ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் . பேரவை கூட்டத் தொடரில், இலங்கை எவ்வாறு செயற்பட வேண்டும் ▷19

## வாகனங்கள் விற்பனைக்கு

பிரபல நிறுவனத்தின் பாவனையில் உள்ள வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.

Toyota ESTIMA HYBRID
இல KY - XXXX
பாவிக்கப்பட்ட Km - 170 000 Km
விலை - 47 இலட்சம்

Glory - 330
இல CAU - XXXX
பாவிக்கப்பட்ட Km - 51 900 Km

இரண்டு வாகனங்களினதும் மொத்த விலை 75 இலட்சம். இரண்டு வாகனங் களையும் ஒன்றாக வாங்கும் பட்சத்தில் 65 இலட்சத்திற்கு விற்கப்படும்.

விபரங்களுக்கு (C-1391)

077 470 5759, 076 329 5792


## திடீர் மாரடைப்பு
# இளம் குடும்பஸ்தர் அல்வாயில் மரணம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி- அல்வாயில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான சுந்தரலிங்கம் நிருத்திகன் (வயது-33) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மருதங்கேணி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் இவர் நள்ளிரவு நெஞ்சு வலிப்பதாக கூறி மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமடைந்தார். (ம-03)

## சாவகச்சேரியில் விபத்து
# மூவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-டச் வீதியில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் மோட்டார் சைக்கிளுடன் உழவியந்திரம் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 9 வயதான இரண்டு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-03,30)


## பணிநிலை வெற்றிடம்

- முன்பள்ளி அதிபர்
- முன்பள்ளி ஆசிரியர்கள்
- ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள்
- அலுவலக எழுதுநர்
- அலுவலக உதவியாளர்

(5583)

மதுரம் கிட்ஸ் முன்பள்ளி
கோப்பாய் தெற்கு, இருபாலை.
☎- 077 912 2918


## சேவைநலன் பாராட்டு



திருமதி விபலினிதேவி இரத்தினவேல்

[SLTS-I (பயிற்றப்பட்ட விஞ்ஞானம்)]

எமது பாடசாலையில் அரும்பணியாற்றி இன்று மணிவிழாக் கண்டு ஓய்வுபெறும் திருமதி விபலினிதேவி இரத்தினவேல் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி
28.03.1990 - 02.02.1997

யா/சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
03.02.1997 - 15.06.2010

யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி
16.06.2010 - 08.02.2021

பாடசாலைச் சமூகம்
யா/ புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி,
புத்தூர். (5582)



## யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் கோயில்


### பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

மேற்படி ஆலயத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் (21.02.2021) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெறும். இதில் பிள்ளையார் அடியார்கள், திருவிழா உபயகாரர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(5585)

ஆலயபணியில்
நிர்வாகம்

# மரண அறிவித்தல்



பிறப்பு : 1933.03.10
இறப்பு : 2021.02.08

## பொன்னையா பாலசிங்கம்

4 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாலசிங்கம் நேற்று (08.02.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணமுத்து - வியாழம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வீரலட்சுமியின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரன் (இலண்டன்), யோகேஸ்வரி, ஜெகதீஸ்வரி (இலண்டன்), கேதீஸ்வரி (ஆசிரியர் - மு/ விக்கினேஸ்வரா வித்தியாலயம் ), கேதீஸ்வரன் (பொது முகாமையாளர் - பலநோக்கு கூ.சங்கம், புதுக்குடியிருப்பு), பாலேஸ்வரி (கனடா), ஞானவேல் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் றஞ்சிதா (இலண்டன்), காலஞ்சென்ற மகேந்திரராசா, தவராசா (இலண்டன்), அன்புமணி (ஆசிரிய ஆலோசகர் - முல்லை கல்வி வலயம்), காலஞ்சென்ற சந்திரா, ஜெயலலிதா, இரகுநாதன் (கனடா), மேகலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.02.2021) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


4 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

077 216 5586

(C-1390)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



பிறப்பு
03-03-1962

இறப்பு
07-02-2021

# வேலாயுதபிள்ளை கனகரத்தினம்

யாழ். வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை கனகரத்தினம் அவர்கள் 07-02-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை- லட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்ரமணியம்- செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசலக்சுமி அவர்களின் அன்புக் கணவரும், வினோதன் (சுவீடன்), வினோஜிதா (சுவீடன்), அகிலன் (நோர்வே), சாரங்கன், கீர்த்தனா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

மயூரன் (சுவீடன்), மனோஜா (சுவீடன்), நிதர்சிகா (நோர்வே), தர்சிகன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவயோகம் (இலங்கை), புவனேஸ்வரி (ஜேர்மனி), யோகேஸ்வரி (சுவிஸ்), இந்திரன் (இலங்கை), விஜயராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

இராசேந்திரம் (இலங்கை), இராஜமோகன் (நோர்வே), இராஜகுலேந்திரன் (சுவீடன்), இராஜமனோகரன் (இலங்கை), இராஜபவான் (லண்டன்), இராஜதன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அதீஸ் (சுவீடன்), அவீனா (சுவீடன்), ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.02.2021 இன்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வரணி குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**வரணி, இயற்றாலை** **தகவல்: குடும்பத்தினர்**

(C-1389)

# ஜோ ரூட் இனிக்குமா 'நூறு' சென்னை டெஸ்டில் 'விறு விறு'

## இந்தியாவுக்கு இமாலய வெற்றி இலக்கு

### ஆறு விக்கெட்டுக்களை கைப்பற்றி அஷ்வின் ஆறுதல்



ஆட்டமிழப்பு ஒன்றுக்காக முறையிடும் ரவி அஷ்வின்

தனது நூறாவது டெஸ்டில் விளையாடும் இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட்டுக்கு சென்னை டெஸ்டில் இனிப்பான வெற்றி கிடைக்குமா? அல்லது போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவுறுமா? என்பதை அறிய கிரிக்கெட் ரசிகர்கள் ஆர்வமாக உள்ளனர். இதனால் இன்றைய இறுதிநாள் ஆட்டம் விறுவிறுப்பாகியுள்ளது.

இங்கிலாந்து நிர்ணயித்த 420 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடி வரும் இந்தியா நேற்றைய நான்காம் நாள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 39 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து அணி 178 ஓட்டங்கள் எடுத்தது. 'சுழலில்' அசத்திய அஷ்வின் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி, அங்கு நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற் கிறது.

முதல் டெஸ்ட் சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கிறது. முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 578 ஓட்டங்கள் எடுத்தது.

நேற்று முன்தினம் மூன்றாம் நாள் முடிவில் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 257 ஓட்டங்கள் எடுத்திருந் தது. வாஷிங்டன் (33), அஷ்வின் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**வாஷிங்டன் அபாரம்**

நான்காம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இந்திய அணிக்கு வாஷிங்டன் சுந்தர், அஷ்வின் ஜோடி இணைப்பை வழங்கியது.

ரொம் பெஸ் பந்தில் அஷ்வின் ஒரு சிக்சர் அடித்தார். பெஸ் பந்தில் வாஷிங்டன் ஒரு பவுண்டரி அடிக்க, இந்த ஜோடி 50 ஓட்டங்களை எட்டியது.

ஜாக் லீச் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய வாஷிங்டன், அரைச்சதம் கடந்தார். பொறுப்பாக ஆடிய அஷ்வின், அண்டர்சன், ஆர்ச்சர் பந்துகளை பவுண்டரிக்கு விரட்டினார். ஏழாவது விக்கெட்டுக்காக 80 ஓட்டங்கள் சேர்த்த போது லீச் பந்தில் அஷ்வின் (31) ஆட்டமிழந்தார். தொடர்ந்து அசத்திய வாஷிங்டன், ரூட் வீசிய 95ஆவது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார்.

லீச் 'சுழலில்' ஷாபாஸ் நதீம் 'டக்-அவுட்' ஆனார். அண்டர்சன் வேகத்தில் இஷாந்த சர்மா (4), ஜஸ்பிரித் பும்ரா (0) ஆட்டமிழந்தனர்.

இந்திய அணி முதல் இன்னிங்சில் 337 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. வாஷிங்டன் (85) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் ரொம் பெஸ் 4, அண்டர்சன், ஆர்ச்சர், லீச் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற் றினார்.

**அஷ்வின் அசத்தல்**

முதல் இன்னிங்சில் 241 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற இங்கிலாந்து அணி, இந்திய அணிக்கு 'பொலோ ஒன்' வழங்காமல் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்தது.

இங்கிலாந்து அணிக்கு அஷ்வின் தொல்லை கொடுத் தார். இவர் வீசிய முதல் பந்தில் ரோரி பேர்ன்ஸ் (0) ஆட்டமிழந்தார். பின், ரொம் சிப்லே (16), பென் ஸ்ரோக்ஸ் (7) ஆகியோரை வெளியேற்றினார். இஷாந்த் 'வேகத்தில்' டான் லோரன்ஸ் (18) வெளியேறினார்.

அடுத்து வந்த அணித் தலைவர் ஜோ ரூட், நதீம், அஷ்வின் வீசிய 12, 15ஆவது ஓவரில் தலா 2 பவுண்டரி அடித்தார். இவர், 32 பந்துகளில் 40 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது பும்ரா பந்தில் ஆட்டமிழந்தார். நதீம் 'சுழலில்' போப் (28), ஜொஸ் பட்லர் (24) சிக்கினர். தொடர்ந்து அசத்திய அஷ்வின் பந்தில் ரொம் பெஸ் (25), ஜோப்ரா ஆர்ச்சர் (5), ஜேம்ஸ் அண்டர்சன் (0) ஆட்டமிழந்தனர்.

இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 178 ஓட்டங்களுக்கு சுருண்டது. ஜாக் லீச் (8) ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்தியா சார்பில் அஷ்வின் 6 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

**கடின இலக்கு**

பின், 420 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த இந்திய அணிக்கு ரோகித் சர்மா, சுப்மன் கில் ஜோடி ஆரம்பம் கொடுத்தது.

ஜாக் லீச் வீசிய 4ஆவது ஓவரில் கில் தொடர்ச்சியாக 2 பவுண்டரிகள் அடித்தார். ஜோப்ரா ஆர்ச்சர் வீசிய 5ஆவது ஓவரில் ரோகித் சர்மா ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார்.

முதல் விக்கெட்டுக்காக 25 ஓட்டங்கள் சேர்த்தபோது ஜாக் லீச் பந்தில் ரோகித் (12) ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 2ஆவது இன்னிங்சில் இந்திய அணி ஒரு விக்கெட்டை இழந்த 39 ஓட்டங்கள் எடுத்து, 381 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது.

துடுப்பாட்டத்தில் சுப்மன் கில் (15), புஜாரா (12) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில்' இங்கிலாந்து சார்பில் லீச் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

**ஆடுகளம் எப்படி**

சென்னையில் நடக்கும் முதல் டெஸ்டின் ஐந்தாவது நாளில் இந்திய அணி 90 ஓவர்கள் துடுப்பாட்டம் செய்ய வேண்டும். இது அவ்வளவு எளிதல்ல. ஏனெனில் ஆடுகளம் மோசமாக உள்ளது. இதுகுறித்து இந்திய முன்னாள் வீரர் தீப்தாஸ் குப்தா கூறுகையில்,"ஆடுகளத்தின் ஒருபக்கம் தூசிகள் நிறைந்து காணப்படுகிறது. மறுபக்கம் சற்று உறுதியாக உள்ளது. இந்த பக்கத்தில் பந்து வீசும் போது, பந்துவீச்சாளர்களுக்கு அதிகம் கைகொடுக்கும். இந்த ஆடுகளத்தில் 90 ஓவர்கள் தாக்குப்பிடிக்க முடியாது. முடிந்தவரை 'டிரா' செய்ய போராடலாம்," என்றார்.

## அஷ்வின் சாதனை

இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பெடுத்தாடியபோது, முதல் ஓவரை இந்தியாவின் அஷ்வின் வீசினார். முதல் பந்தில் பேர்ன்சை 'டக்' அவுட்டாக்கினார் அஷ்வின்.

இதையடுத்து கடந்த 114 ஆண்டு டெஸ்ட் வரலாற்றில் ஒரு இன்னிங்சில் முதல் பந்தில் விக்கெட் சாய்த்த முதல் சுழற்பந்து வீச்சாளர் என்ற பெருமை பெற்றார் அஷ்வின்.

இதற்கு முன் 1988ல் இங்கிலாந்தின் பாபி பீல் (எதிர் ஆஸி.), 1907ல் தென்னாபிக்காவின் பெர்ட் வோல்கர் (எதிர் இங்கிலாந்து) முதல் பந்தில் விக்கெட் சாய்த்தனர்.

◈ ஒரு இன்னிங்சில் அதிக ஓவர்கள் எபந்துவீச்சை மேற்கொண்டது சென்னை டெஸ்டில் தான். இவர் முதல் இன்னிங்சில் மட்டும் 53.1 ஓவர் பந்து வீசினார். 2011-12ல் அடிலெய்ட் டெஸ்டில் இதற்கு முன் 53.0 ஓவர்கள் வீசியது தான் அதிகமாக இருந்தது.

◈ 28 வது முறையாக அஷ்வின் 5 அல்லது அதற்கும் மேல் என விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

## கிண்ணம் வென்றது பாக்




தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் 95 ஓட்டங்களால் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி தொடரை 2-0 எனக் கைப்பற்றியது.

பாகிஸ்தான் சென்ற தென்னாபிரிக்க அணி, 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் டெஸ்டில் பாகிஸ்தான் வென்றது. இரண்டாவது டெஸ்ட் ராவல்பிண்டியில் நடந்தது. முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் 272, தென்னாபிரிக்கா 201 ஓட்டங்கள் எடுத்தன. 2ஆவது இன்னிங்சில் பாகிஸ்தான் 298 ஓட்டங்கள் எடுத்தது.

பின், 370 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி நேற்று முனதினம் 4ஆம் நாள் ஆட்டநேர நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 127 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

மார்க்ரம் சதம்

நேற்று 5ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. வான்டெர் துசென் 48 ஓட்டங்களுடன் கிளம்ப, டுபிளசி (5), அணித் தலைவர் கொக் (0) அணியை கைவிட்டனர். மார்க்ரம் 108 ஓட்டங்கள் எடுத்து ஆறுதல் கொடுத்தார்.

வேகத்தில் மிரட்டிய ஷீன் அப்ரிடி, பவுமாவை (61) அவுட்டாக்க, திருப்பம் ஏற்பட்டது. இதன்பின்ன வந்த வீரர்கள் சோபிக்கத் தவற தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்சில் 274 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பாகிஸ்தான் 95 ரன்னில் வெற்றி பெற்றது. தொடரை 2-0 என கைப்பற்றி, கிண்ணம் வென்றது.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

PEARSON INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Academic
IELTS General
IELTS Life skills.

# Weekday classess
# Weekend Classess
# Personal Classes
# Group Classes
# Lecturers are above band 8 years and professionally qualified

98% Students In IELTS Scored above 6.5
Learn the techiniques to score above 6.0
Unbeatable Success rate in Northern Province

Registered Exam Centre for IELTS
Special discounts for upcoming registration
074 188 7878 infopearsonicollege@gmail.com
idp IELTS
No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, Jaffna

# குடியியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

## மாவட்ட நீதிமன்றம்,யாழ்ப்பாணம்

சண்முகராஜா அரவிந்தன்,
கொற்றாவத்தை,
கரணவாய் வடக்கு,
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.

-வழக்காளி

வழக்கு இல:விசேடம்/17/2021

எதிராக,
1.த.இராசலிங்கம்
தலைவர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி,
2.வீரசிங்கம் ஆனந்தசங்கரி,
செயலாளர் நாயகம்,
தமிழர் விடுதலைக் கூட்டணி,
இருவரும்
தலைமை அலுவலகம்,
தந்தை செல்வா அகம்,
இல.1077, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

-எதிராளிகள்

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1ம், 2ம் எதிராளிகளுக்கு எதிராக 1ம் எதிராளி தலைவராகவும் 2ம் எதிராளி செயலாளர் நாயகமாகவும் பதவி வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்ட வலுவற்றது எனப் பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர் வாதிடலாம் என குடியியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ்வழக்கானது எதிர்வரும் 12.02.2021 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

"மன்றின் கட்டளைப்படி"

(5576)

திகதி: 2021.02.08

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## முகுந்தன் லியானன்

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவனை பாராட்டுவதோடு 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற 25 மாணவர்களையும் அவர்களின் வெற்றிக்கு வழிசமைத்த பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5579)

பாடசாலை சமூகத்தினர்
கிளி/முக்கொம்பன் மகா வித்தியாலயம்.

# JOB வேலை வாய்ப்புகள்

## காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### காரைநகர்
### பணிநிலை வெற்றிடம்

எமது சங்கத்தின் கீழ்க் குறிப்பிட்டுள்ள 05 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

**01. பதவி : வங்கிச் சேவை முகாமையாளர் 111/10 வெற்றிடம் - 01**

சம்பள அளவுத்திட்டம் 17605 - 198X10 - 220X10 - 21785 (4/2018 இன் படி)

I கூட்டுறவுச் சங்க ஊழியர் 11 ஆம் சம்பளத்திட்டத்தில் தொடர்புடைய துறையில் முகாமை / மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 12 ஆம் சம்பளத்திட்டத்தில் தொடர்புடைய துறையில் முகாமை / மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

II அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் வங்கி அலுவலகங்கள் பற்றிய ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்

III கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் / க.பொ.த (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தியுடன் வங்கித்துறையில் மேற்பார்வை மட்ட பதவியொன்றில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்

**02. பதவி : எழுதுநர் 302/15 வெற்றிடம் - 02**

சம்பள அளவுத்திட்டம் 15545 - 130X10 - 140X10 - 15815 (4/2018 இன் படி)

I கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

II க.பொ.த. (சாதாரண தரத்தில்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் பாஷை உட்பட 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அளவுகளில் சித்தியும் கூட்டுறவு சங்க எழுதுநர் பதவியொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்

- கணனி அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**03. பதவி : கிளை முகாமையாளர் 208/15 வெற்றிடம் - 02**

சம்பள அளவுத்திட்டம் 15545 - 130X10 - 140X10 - 15815 (4/2018 இன் படி)

I கூட்டுறவு பணியாளர் 16 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

II கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) பத்திரம் /க.பொ.த. சாதாரண தரத்தில் இரண்டு அமர்வுக்கு மேற்படாமல் கணிதத்தில் / தமிழ் என்பவற்றை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி. சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**04. பதவி : விற்பனை உதவியாளர் 308/17 வெற்றிடம் - 2**

சம்பள அளவுத்திட்டம் 14725 - 115X10 - 130X10 - 17175 (4/2018 இன் படி)

I அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் கூட்டுறவுப் பணியாளர் (கனிஷ்ட) தராதரம்

அல்லது

II 8 ஆம் வகுப்பிலான சித்தியும் விற்பனைத் தொழில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம்

**05. பதவி : சாரதி 312/14 வெற்றிடம் - 1**

சம்பள அளவுத்திட்டம் 15960 - 135X10 - 145X10 - 18760 (4/2018 இன் படி)

I 5 ஆம் வகுப்பு சித்தியுடன் பஸ் அல்லது லொறி அல்லது டிரக்டர் பெட்டியுடன் செலுத்தும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். குறைந்தது இரண்டு வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

### நிபந்தனைகள்

I வயதெல்லை 18 - 45 இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

II கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

III விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழின் பிரதியும் இணைக்கப்படல் வேண்டும்.

IV மேற்படி பதவிகளுக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தினால் விதிக்கப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும். சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை

மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிக்கான விண்ணப்பப் பெயரினைக் குறிப்பிட்டு பொதுமுகாமையாளர், காரைநகர் பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கம், காரைநகர் எனும் முகவரிக்கு 25.02.2021 ஆம் திகதிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(C-1385)

பொதுமுகாமையாளர்

# நாங்கள் மதத்திற்கோ இனத்திற்கோ எதிரானவர்களல்ல

# எமது உரிமைக்காக போராடுகிறோம்

(யாழ்ப்பாணம்)

**தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் எதற்கு? விகாரைகள் எதற்கு? என வடக்கு-கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களின் இணைத்தலைவர் தவத்திரு. வேலன் சுவாமிகள் கேள்வி எழுப்பியுள்ளார்.**



வடக்கு- கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான நாவற்குழியைக் கடந்து செம்மணி வரவேற்பு வளைவை நேற்று முன்தினம் வந்தடைந்த வேளை உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாங்கள் எந்த மதத்திற்கும் அல்லது இனத்திற்கும் எதிரானவர்கள் இல்லை. ஆனால், சிங்களவர்கள் இல்லாத தமிழர்கள் வாழும் பகுதிகளில் சில விடயங்கள் திணிக்கப்படுவதைத் தான் எதிர்க்கின்றோம். நாங்கள் நீதிகேட்டுப் போராடுகின்றோம்.

எங்களின் எத்தனையோ உறவுகள் சொந்த நிலமில்லாமல், வீட்டுத் திட்டத்தில் வீடுகளைக் கட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கக் கூடிய நிலையிலும், இன்றும் நலன்புரி முகாம்களில் வாடிக் கொண்டிருக்கும் நிலையிலும் ஏன் சிங்களவர்களை நாவற்குழியில் கொண்டு வந்து குடியேற்றுகிறீர்கள்.

அதுமாத்திரமன்றி மக்களின் சம்மதமின்றி விகாரை அமைப்பதும் ஏற்றுக் கொள்ள முடியாதது. வடக்கு- கிழக்கில் சமய நல்லிணக்கத்திற்கும், சமாதானத்திற்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையிலும் சிங்களக் குடியேற்றங்களையும், விகாரைகளையும் அமைப்பதை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4-18)

# திருட்டில் ஈடுபட்ட மூவர் 24 மணிநேரத்திற்குள் கைது



(நல்லூர்)

கோண்டாவிலில் வீடுபுகுந்து கொள்ளையில் ஈடுபட்டோர் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் 24 மணித்தியாலத்திற்குள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை கோண்டாவில் செபஸ்ரியன் வீதியில் உள்ள வீடொன்றில் புகுந்து வீட்டில் உள்ளவரை காயப்படுத்தி 6 பவுண் தாலிக்கொடியினை அபகரித்து சென்ற குற்றச்சாட்டில் மூவர் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


திருட்டு கும்பல் வீட்டில் இருந்தவரை கூரிய ஆயுதத்தினால் தாக்கி காயப்படுத்தி விட்டு அவருடைய தாலிக் கொடியினை அறுத்து தப்பிச் சென்றிருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிப்புரைக்கமைய குறித்த முறைப்பாட்டினை மாவட்ட குற்றத் தடுப்பு பொறுப்புபிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரான்சிஸ் தலைமையிலான பொலிஸ் அணியினர் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த மூவர் கைது செய்யப் பட்டனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் குறித்த வீட்டில் இருந்து அபகரிக்கப்பட்ட தாலிக்கொடி கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரின் வீட்டு மலசல குழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தாலிக் கொடி கைப்பற்றப்பட்டுள்ளதோடு மற்றைய சந்தேக நபரின் வீட்டிலிருந்து இரண்டு பெரிய வாள் மற்றும் 250 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் யாழ்ப்பாண நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-4-33)

# நெடுந்தீவின் தனித்துவத் தன்மை பாதுகாக்கப்பட வேண்டும்



(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தின் நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள பிரதான சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்து அவற்றின் தனித்துவத்தை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அண்மையில் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக பிரதேச செயலகத்தினர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் அதிக சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் இடமாக நெடுந்தீவு அமைந்துள்ளது. ஆகையால் இங்கு காணப்படும் பிரதான சுற்றுலா மையங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன், சுற்றுலா மையங்களின் விபரணங்கள் மூன்று மொழிகளிலும் காட்சிப்படுத்த வேண்டும்.

அந்த வகையில் நெடுந்தீவுப் பிரதேசத்தின் பிரதான சுற்றுலா மையங்களாக பெருக்கு மரம், அனுமன் பாதச் சுவடு, வளரும் கல், குதிரை லயம், குதிரைகள், புறாக்கூடு, மருத்துவக்கேணி, குயிந்தா கோபுரம் மற்றும் வெடியரசன் கோட்டை ஆகியன காணப்படுவதாக மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். (5-4-30)



• மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலையத்தின் 44வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சனசமூக நிலையத்தினரால் வேம்பிராய் இந்து மயானத்தில் சிரமதானப் பணி அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. குறித்த சிரமதான நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர் சி.கஜேன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம்:சுபேசன்)



தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட தெல்லிப்பழை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் வாடிக்கையாளர் சேவையானது கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச. சிவஸ்ரீ தலைமையில் சமுர்த்தி திணைக்கள பணிப்பாளர் நாயகம் ப.திலகசிறியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது .

# ஆன்மிக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவிலில் "அபிராமி பட்டர்" குருபூஜையை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இச் சொற்பொழிவு நாளை மறுதினம் 11 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஆலய பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் திருவருள்வாசகர் சைவப் புலவர் கா.கமலநாதன் "தமனியக் காவினில் தங்குவரே" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (5)

• • • • • • • • • • • • • • • • • • •

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்த சொற்பொழிவு எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணிக்கு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிவநெறிச்செம்மல் சைவ சின்மயர் செ.பாலச்சந்திரன் "சைவ சமயப் பொக்கிஷங்கள் நிலைக்கப் புராணபடலம்" எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (5)

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அரும்பணியாற்றிய உயர்திரு ஞா.இரத்தினசிங்கம் அவர்களின் மணிவிழா சிறப்புமலர்



### Message from the Chief Commissioner (Teacher Education)

It is my pleasure in giving a blessing message for the lecturer at Jaffna National College of Education Mr.G.Ratnasi ngam on his retirement.

I must congratulate Mr.G.Ratnasingam for his hardest and dedicated work in molding competent teachers for the last couple of years at Jaffna National College of Education, and many years in Jaffna Education Department.

He is a role model for teachers especially novice teachers in developing positive attitude towards their students and team spirit with co-workers. He is always prepared in involving in every co-curricular activity for students and in administrative work as well.

Mr.G.Ratnasingam is a well-known resource person of Science abject and his volunteer service has been exploited by almost all education institutions in Jaffna District to improve the achievement level of students in Science.

I wish him for his continuous service and pray God for his peaceful, happy, and healthy retired life.



### வாழ்த்துச் செய்தி

திரு.ஞானமணி இரத்தினசிங்கம் அவர்கள் தன்னுடன் சேவையாற்றுபவர்கள் மட்டுமல்லாது அனைவரையும் சமமாக மதித்து எல்லோருடனும் சகஜமாக பழகும் பண்புடையவர்.அவர் எத்தகைய சோகங்கள் தனக்குள் இருந்தாலும் மற்றவர்களை மகிழ்ச்சியடைய வைப்பது என்பது எல்லோராலும் முடியாத ஒன்று அத்தகைய சிறந்த பண்பை தன்னகத்தே கொண்டவர். சிரிப்பு என்பது மனிதனோடு கூடப்பிறந்த ஒரு உணர்வின் வெளிப்பாடாகும். இது ஒரு ஆரோக்கியமான மனிதனிடமிருந்து பலவிதமான சந்தர்ப்பங்களிலும் இயல்பாக வெளிப்படக் கூடிய ஒன்று. சிரிப்பு மனதையும், உடலையும் வலிமைப்படுத்தி புத்துணர்வுடன் வைத்திருக்கும். சிரிக்கும் போது உடலிலும், மனதிலும் உள்ள அழுத்தங்களும், கவலைகளும் வெளியேறுகின்றன என மருத்துவர்கள் கூறுகின்றனர். தன்னுடைய குசும்புப் பேச்சால் அனைவரையும் சிரிக்க வைக்கும் பண்புடையவர். இத்தகைய பெருந்தகைக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

விழுமியம் சார்ந்த பண்புகளையும், பன்முக ஆளுமையும், எந்தவொரு விடயத்தினையும் தனித்து நின்று எதற்கும் அஞ்சாது முன்னின்று நடாத்தும் பண்பும், அனைவருக்கும் உதவி செய்யும் மனப்பாங்கும் என்னை மட்டுமல்லாது அனைவரையும் கவர்ந்ததாகும். எப்போதும் சிரித்த முகத்தோடு பழகும் பண்பு கொண்டவர்.

"கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி"


எனும் குறட்பாவுக்கு இலக்கணமானவர். தீமையும், நன்மையும் எல்லோர்க்கும் முன்பே குறிக்கப்பட்டுவிட்ட தொன்றாகும். இதை அறிந்து நெஞ்சத்தால் நீதி, தவறாது இருப்பது சான்றோர்க்கு அழகாகும் என்ற பண்புக்குரியவராவார்.

கல்விப் புலத்தைப் பொறுத்தவரை அறுபதாம் அகவை என்பது ஒரு முடிவல்ல. அது ஒரு ஆரம்பம்.இன்னும் பல அரிய பணிகளை புதிய உத்வேகத்தோடு தொடங்கக் கூடிய இனிய தருணம் இது. இப் பெருமானை எம் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

இவரின் கல்விப்புலமை மேன்மையுற்று எதிர்காலம் சிறக்கவும் இவரின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர்கள், மனைவி, பிள்ளைகள் எல்லோருக்கும் எனது நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு இவர்கள் எல்லோருடனும் நனி சிறந்து விளங்கவும் இன்னும் பல அகவைகளை காணவும் நாம் வாழ்த்தவும் வேண்டும் எனவும் மென்மேலும் சீரும் சிறப்புடனும் வாழ யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சார்பிலும் எனது தனிப்பட்ட ரீதியாகவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

தமிழ் பேசும் சமூகத்திற்கு தாங்கள் ஆற்றிய மகத்தான கல்விப்பணி தொடர்ந்து நிலைபெற்றிடவும் சுகநலன்களுடன் தங்கள் வாழ்வு சிறப்படையவும் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இறையாசியையும் வேண்டி நிற்கின்றேன்.

**சு. பரமானந்தம்**
**பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



## ஞானமணி இரத்தினசிங்கம்

(Sci Sp Tr.,BA.,Dip in Edu.,MEd. SLTES III)

கட்டுடை மானிப்பாய். 1961-02-09
பெற்றோர் சண்முகம்பிள்ளை ஞானமணி
ஞானமணி கனகம்மா

கல்வி
யா/சண்டிலிப்பாய் வாணி நிகேதன வித்தியாசாலை. தரம் 1-3.
யா/ கட்டுடை வித்தியாசாலை - தரம் 4-5.
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி - தரம் 6 முதல் உயர்தரம் வரை.

சேவை முன்பயிற்சி
கண்டி/கிங்ஸ்வூட் கல்லூரி-1987.12.14.

கடமை.
யா/நயினாதீவு மகா வித்தியாலயம். 1988-01-21.

பயிற்சி.
பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை 1990-1991.

### கடமை

| | |
|---|---|
| யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம். | 1992-01-01. |
| கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை. | 1996-01-21. |
| யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம். | 1996-08-01 |
| யா/கல்வி வலய கணித விஞ்ஞான வள நிலையம | 1997-08-09 |
| யா/கல்வி வலய விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர். | 2001-11-01 |
| யாழ்ப்பாணம் ஆசிரியர் வள நிலையம். | 2007-11-01 |
| மடு கல்வி வலய ஆசிரியர் வள நிலையம். | 2014-12-15 |
| தீவகம் மற்றும் யாழ்ப்பாணக் கல்விவலய ஆசிரியர் வள நிலையம். | 2015-02-21. |
| யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி | 2018-12-10 முதல் நேற்று வரை. |



### "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்" பண்பு பாராட்டும் உலகு

கண்டி கிங்ஸ்வூட்டில் ஆசிரிய முன் சேவை பயிற்சிநெறியில் சகபயிற்சியாளராக அறிமுகமான பொழுதில் இருந்து, இற்றைவரை அவரது ஆற்றல், ஆளுமை அவற்றினூடாக அவரது வளர்ச்சி என்பவற்றை அருகிலிருந்து வியந்திருக்கின்றேன். மிலேனியத்தை அண்மித்த இரு தசாப்தங்களாக யாழ். கல்வி வலயத்தின் அனைத்துக் கல்விச் செயற்பாடுகளிலும் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கியவர் எமது நாயகனாவார் என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞான ஆசிரியராக, சேவைக்கால ஆலோசகராக, ஆசிரிய வளநிலைய முகாமையாளராக, கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராக ஒவ்வொரு படிநிலைகளிலும் தனது அர்ப்பணிப்பான சேவையினால் தனித்துவமாக மிளிர்ந்தவர் எம் மணிவிழா நாயகன் என்றால் அது மிகையில்லை.

ஆசிரிய வாண்மை விருத்திச் செயலமர்வாகட்டும், மாணவர்சார் பாசறைகளாகட்டும் அவற்றினை உயிர்ப்புள்ளதாக்கி பங்குபற்றுநர்களை கலகலப்புடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் செயற்பட வழிப்படுத்தும் இயல்பானது கல்வியியலாளர் இரத்தினசிங்கத்திற்கே உரித்தான சிறப்பியல்புகளில் ஒன்று

JICA செயற்றிட்ட அமுலாக்கத்தின் போது யாழ் .கல்வி வலயப் பாடசாலைகளை தேசியநிலையில் முதல் நிலை பெற வைத்த பெருமைக்குரிய வளவாளர் இரத்தின சிங்கம் என்பது பலரும் அறியாத உண்மை. மணிவிழா நாயகன் ஓய்வுக்காலத்தில் செவ்வராணி சமேத மழலையர்களுடன் கூடிக் களித்திருக்கவும் புதிய சமூக தடயங்களை தேடி தனது ஆற்றல்களையும் அனுபவங்களையும் சமூக மேம்பாட்டுக்கு வழங்கவும் சந்நிதியான் துணையிருப்பானாக.

**யோகசாமி ரவீந்திரன்**
**ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி.**



### வாழ்த்துச் செய்தி

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றி அகவை அறுபதில் ஓய்வு பெறும் திரு.ஞா.இரத்தினசிங்கம் அவர்களது சேவையினைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

ஆசிரியராகத் தனது பணியினை ஆரம்பித்து ஆசிரிய ஆலோசகராக, ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளராகக் கடமையாற்றி ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டு தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராக ஓய்வு பெறுகின்றார்.

யாழ்.வலயத்தில் கடமையாற்றிய காலத்தில் வலயத்தின் சகல செயற்பாடுகளிலும் தனது பங்களிப்பினை வழங்கியவர். மாகாண கல்வித் திணைக்களத்தினால் புதிய ஆசிரியர்களுக்காக நடாத்தப்படுகின்ற சேவை முன்பயிற்சிகளின் இணைப்பாளராகச் செயற்பட்டு அவற்றினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் இவரது பங்களிப்பு அளப்பரியது. எந்த நிகழ்வினையும் கலகலப்பாகவும், சலிப்பின்றியும் கொண்டு செல்வதில் திறமை வாய்ந்தவர். ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளராகவும் கல்வியியற் கல்லூரி விரி வுரையாளராகவும் இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இவரது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளைப் பாராட்டுவதோடு ஓய்வுக் காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**செ. உதயகுமார் , மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.**



### தலைமைத்துவப் பண்பாளன்

திருவாளர் ஞா.இரத்தினசிங்கம் - விரிவுரையாளர் அவர்கள் நிறைந்த தலைமைத்துவப் பண்பு கொண்ட ஒரு மாமனிதர். பலராலும் அறியப்பட்ட சிறந்த ஒரு ஆசான். இவர் முகாமையாளராக யாழ்ப்பாணம் மற்றும் தீவக ஆசிரிய வாண்மை விருத்தி நிலையங்களில் கடமையாற்றியவர். அக்காலப்பகுதியில் தனது பணியினை வினைத்திறனுடன் முன்னெடுத்துச் சென்றவர். அத்துடன் அவரின் கீழ் பணியாற்றும் ஊழியர்களை மிகுந்த பண்புடனும், பக்குவமாகவும் வழிநடத்திச் செல்லும் திறமை வாய்ந்தவர்.

இவர் ஒரு சிறந்த வளவாளர் என்பதை நேரடியாகத் தரிசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவரது செயலமர்வுகளில் ஆசிரியர்கள் மிகுந்த உற்சாகத்தோடும், குதூகலத்தோடும் நேரம் போவதே தெரியாமல் ஆர்வத்தோடு பங்காற்றுவதைக் காணக்கூடியதாக இருந்தது. விடயப்பரப்புகளை மிகவும் நுணுக்கமாக தனது வாழ்வில் கண்ட அனுபவங்களோடு இணைத்து ஆசிரியர்களுக்கு வழங்குவதைக் காண முடிந்தது. மொழிப்புலமையைப் பொறுத்தவரையில் மிகச் சிறந்த ஆற்றல் கொண்டவராகவும், இங்கிதமான தொடர்பாடல் திறன் உடையவராகவும் விளங்குகிறார். இன்றைய மாணவ-ஆசிரிய சமூகத்திற்கு மிகச் சிறந்த முன்னோடியாகத் திகழ்பவர்.

**திருமதி தயாளினி செந்தில்நாதன்**
**முகாமையாளர், ஆசிரிய வாண்மை விருத்தி நிலையம், யாழ்ப்பாணம்.**

### ஆசிரிய கல்வியியலாளர் நலன்புரிக் கழகத்தின் வாழ்த்துச் செய்தி

திரு.ஞா.இரத்தினசிங்கம் சேர் அவர்களுடன் இரண்டு வருடங்களே சேவையாற்றுவதற்கு கிடைத்தது. இவரது தாரக மந்திரம் "ஒரு பிரச்சினையும் இல்லை. எல்லாம் வெற்றியாக அமையும்" இவர் எளிமையான தோற்றமும் இயல்பாகப் பேசும் ஆற்றலும் உடையவர். அவரது அர்ப்பணிப்பான சேவை மனப்பான்மையும் எல்லோருடனும் இனிமையாகப் பேசி பழகும் திறமையும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு இயங்கி செயற்படுகின்ற ஆற்றலும் தனது பேச்சாற்றல்மூலம் அச்சூழலை மகிழ்ச்சியாக வைத்திருக்கும் ஆற்றலும் சிறப்பான பண்புகளாக கொண்டமைந்தவர். இது எல்லோராலும் முடியாது. அத்துடன் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் ஆற்றலும் எங்கு பார்த்தாலும் இரத்தினசிங்கம் சேர் எடுத்த பொறுப்பை திறமையாக முடிக்கும் ஆற்றலும் உள்ளவர். ஓய்வு பெறகின்றாரா? என்ற வினாவைத்தான் கேட்கின்றார்கள். காரணம் அவரது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் போது பாடத்திற்கு பொருத்தமான நகைச்சுவைகளை கூறி சூழலை மகிழ்ச்சிகரமாக்கி சிறந்த கற்றல்.கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதே ஆகும்.

இத்தகைய சிறப்பான பண்புகளைக் கொண்டுள்ள மணிவிழா நாயகன் தனது ஓய்வுக் காலத்தில் இறைவனின் துணையோடு நோய்நொடியின்றி, சீரும் சிறப்பாக அவரும் அவரது குடும்பத்தினரும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகிறோம்.


**நலன்புரிக்கழகம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

(C-1375)

# அதிபரை நியமிக்கக் கோரி கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு

(முறிகண்டி)

**கிளிநொச்சி யூனியன்குளம் பாடசாலைக்கான நிரந்தர அதிபரை நியமிக்கக்கோரி பாடசாலை நுழைவாயிலை மூடி நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட மிகவும் பின்தங்கிய கிராமத்தில் அமைந்துள்ள யூனியன்குளம் பாடசாலைக்கு கடந்த 8 வருடங்களுக்கு மேலாக நிரந்தர அதிபர் எவரும் நியமிக்கப்படாமல் இருப்பதனால் மாணவர்களின் கல்வி முதற்கொண்டு பாடசாலை அபிவிருத்தி சார்விடயங்களிலும் பின்தங்கி காணப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே பெற்றோர்களால் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டு கோரிக்கை கடிதங்கள் அனுப்பட்ட போதும் இதுவரை அதிபர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

இந்த நிலையில் இப் பாடசாலைக்கு நிரந்தர அதிபரை நியமிக்கக்கோரி பெற்றோர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களால் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தில் பாடசாலை நுழைவாயிலை மூடி குறித்த பேராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி தற்காலிகமாக ஒரு அதிபரை இன்று நியமிப்பதாகவும் விரைவில் இதற்கான நிரந்தர தீர்வை பெற்றுத் தருவதாகவும் உறுதி அளித்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.(5,4,100,316)

# தொற்றாளர்கள் தொகை அதிகரிப்பு பணிப்பாளர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேலும் 11 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 207 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டி.வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக்காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது மக்கள் இந்த நிலைமையை கருத்தில் கொண்டு மிகவும் அவதானத்தோடும், விழிப்புணர்வுடனும் சுகாதார நடை முறைகளை பின் பற்றி நடந்து கொள்ள வேண்டும்.

தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 8962 பி.சி. ஆர்.பரிசோதனைகள் சமூகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெப்ரவரி மாதம் 334 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் சுகாதார சேவையில் கடமையாற்றுகின்ற 91 சதவீதத்திற்கும் அதிகமான உத்தியோகத்தர்களுக்கு மன்னார் மாவட்டத்தில் முதற்கட்டத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி 4 வாரங்களின் பின்னர் மீண்டும் செலுத்தப்பட உள்ளது.

மேலும் நேற்று மன்னார் பொலிஸ் நிலையத்தில் முன்னணி நிலைகளில் கடமையாற்றுகின்ற 70 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுளன அவர் மேலும் தெரிவித்தார். (5-4-285)

# நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித்திட்டம் மன்னாரில் ஆரம்பம்



(மன்னார்)

ஜனாதிபதியின் சௌபாக்கிய கொள்கையின் கீழ் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 5000 கிராமிய விவசாயக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் சுமார் 138 குளங்களை மறுசீரமைப்பு செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக நேற்றைய தினம் மன்னாரில் ஆரம்பமானது.

குறித்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த திட்டம் சுமார் 8 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-285)


# மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

(தருமபுரம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு தொட்டியடி பகுதியில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ். மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த காளைகள் பங்குபற்றின. இதில் வெற்றி பெற்ற காளை உரிமையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (5-4-316)





# நீர்ப்பாசன செழுமை வேலைத்திட்டம் கிளிநொச்சியில் ஆரம்பம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நீர்ப்பாசன செழுமை தேசிய வேலைத்திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஆரம்ப நிகழ்வானது நேற்று முன்தினம் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழான குமரபுரம் பிரதேசத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

குமரபுரம் பிரதேச எல்.ஆர் அணைக்கட்டு பகுதியை புனரமைக்கும் செயற்றிட்டத்திற்காக 9.5 மில்லியன் ரூபாய் நிதியானது முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டமானது எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதிக்குள் முடிவுறுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சித்திட்டமானது நீர்ப்பாசன அமைச்சின் வழிகாட்டதலின் கீழ் வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள் நீர்த்தேக்கங்களை அபிவிருத்தி செய்தல் என்பன நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழாக இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆரம்ப நிகழ்வில் மாவட்டச் செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உத்தியோகத்தர்கள், கமநல திணைக்கள உதவி ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசன திணைக்கள் உத்தியோகத்தர்கள், மத குருமார்கள், விவசாயிகள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (5-4-316)

# கடவைகள் அமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் புகையிரத வீதியை குறுக்கறுத்துச் செல்லும் வீதிகளின் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் தொடர்பாக கவனம் எடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் இந்திராபுரம் வீதி மற்றும் பறவைக்குளம் வீதி, நரசிம்மவைரவர் வீதி போன்றவற்றுக்கு புதிதாக கடவை அமைக்க வேண்டும் என்றும் முகமாலை பிரதான வீதி, சின்ன தாளையடி வீதி,தர்மக்கேணி வீதி, வேம்பொடுகேணி, கச்சார்வெளி இணைப்பு வீதி போன்ற இடங்களில் உள்ள வீதிக்கடவைகள் பாதுகாப்பான கடவைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-315)

# இராசிபலன்

09.02.2021
தை 27, செவ்வாய்க்கிழமை
திரயோதசி பின்னிரவு 2.25 மணிவரை
பூராடம் பிற்பகல் 3.01 மணிவரை
சுபநேரம் 11.05-12.35 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை
சந்திராஷ்டமம் - ரோகினி, மிருகசீரிடம்
பிரதோச விரதம் வளவன்

**மேஷம்**: சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, மகிழ்ச்சி அதிகரித்து மன மாற்றம் காணும் நாள்.

**ரிஷபம்**: மனக்குழப்பம் தீர பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மிதுனம்**: நட்பு வட்டம் விரிவடையும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், காரிய அனுகூலமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்**: தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு சிறப்பினைத் தரும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்**: உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி**: பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மகிழ்ச்சிகரமான செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்**: சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் மேலோங்கும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**: உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு**: மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்**: வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்**: உன்னதமான வாழ்விற்கு அடித்தளம் அமைப்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்**: பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

தான தர்மத்திற்கு அளவு இல்லை.

# நாட்டின் தற்போதைய செயற்பாடுகள் சர்வதேச அழுத்தங்களை மேலும் வலுப்படுத்தும்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை மீது மேலும் அழுத்தம் பிரயோகிக்கக் கூடிய வகையிலேயே தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஜனாதிபதியால் அண்மையில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்.

அநுராதபுரத்தில் அமைந்துள்ள டி.எஸ்.குணசேகர என்ற நிறுவனத்தின் ஊடாக ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானோரால் செய்யப்பட்டுள்ள மோசடிகள் குறித்த ஆதாரங்கள் எமக்கு கிடைத்துள்ளன. இந்த நிறுவனத்திற்கு 3.1 பில்லியன் கடன் வழங்கப்பட்டுள்ள போதிலும் அந்த கடன் தொகை உரிய நேரத்தில் மீளச் செலுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அரச வங்கிகள் பாரிய நட்டமடைந்துள்ள போதிலும் ராஜபக்ஷ குடும்பத்தினர் இலாபமீட்டிக் கொண்டுள்ளனர். அநாவசியமான விடயங்களுக்கு ஆணைக்குழுக்கள் அமைப்பதை விட இவ்வாறான விடயங்கள் தொடர்பில் ஆணைக்குழு அமைக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை இலங்கை மீது மேலும் மேலும் அழுத்தம் பிரயோகிக்கும்



வகையிலேயே தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும். ஆணைக்குழுக்கள் ஊடாக மக்களின் சிவில் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. தெரிந்து கொண்டே மீண்டும் தவறிழைக்கின்றனர் என ராஜித தெரிவித்தார். (நி-4)

# அரசாங்கத்திற்கு எதிராக களமிறங்க தயாராகும் சுதந்திரக் கட்சி

(கொழும்பு)

நிலவும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார பிரச்சினைகள் காரணமாக பொது மக்களால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவை வழங்க தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கட்சியின் பிரதித் தலைவர் ரோஹண லக்ஷமன் பியதாச, கடந்த தேர்தல் காலங்களில் இந்த அரசாங்கம் மீது பொதுமக்கள் கொண்டிருந்த நம்பிக்கை தற்போது இல்லாது போய்விட்டதாக தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளின் காரணமாக தற்போது விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பலர் வேலைநிறுத்த போராட்டங்களை தொடங்கியுள்ளனர்.

எனவே அரசாங்கம் இவ்வாறு தனது கடமைகளை நிறைவேற்றத் தவறியுள்ளதால் மக்களின் போராட்டத்திற்கு முன்னின்று செயற்படவும் ஆதரவு வழங்கவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராக இருப்பதாக தெரிவித்ததுடன் மேலும் மோசடி மற்றும் ஊழலில் ஈடுபட்டவர்களை தண்டிக்க ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மோசடி மற்றும் ஊழலைத் தடுக்க எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் கட்சியின் பிரதித் தலைவர் ரோஹண லக்ஷமன் பியதாச குறிப்பிட்டார். (நி-4)

# கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது

(கொழும்பு)

மேல் மாகாணத்துக்கு வெளியில் கொரோனா அச்சுறுத்தல் 3 மடங்கு அதிகரித்திருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் இது குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக அந்த சங்கத்தின் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

எனினும் அது தொடர்பில் கவனம் செலுத்தாமை காரணமாக தற்போது நாடு முழுவதும் நோயாளர்கள் அடையாளம் காணப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த நிலைமையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளா விட்டால், இந்த மாத இறுதியின் போது மிகவும் அபாயமான நிலையை எதிர் கொள்ள வேண்டி ஏற்படும் என அந்த சங்கத்தின் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார். (நி-4)

# இன்றுமுதல் பாராளுமன்ற அமர்வுகள்

(கொழும்பு)

இன்று முதல் வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து நான்கு நாட்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-4)

# 103 வயது மூதாட்டி கொரோனாவால் பலி

(கொழும்பு)

நாட்டில் 103 வயதுடைய மூதாட்டி ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மரணமடைந்துள்ளார்.


காலி கிரிமங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிப பெண்ணொருவர் கடந்த 06 ஆம் திகதி அவரது வீட்டிலேயே உயிரிழந்துள்ளார்.

அதன் பின்னர் அவரது சடலம் கராபிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்லப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுதுதப்பட்டது.

இதன்போது, அவர் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி இருந்தமை தெரிய வந்துள்ளதாக காலி மாவட்ட பொது சுகாதார பரிசோதகர் பிரியந்த டி சில்வா குறிப்பிட்டார்.

நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்த அதிக வயதுடையவர் இவரென தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)





இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் இளவாலை மெய்கண்டான் ம.வி. பாடசாலையில் சுகாதார அறை அமைப்பதற்காக 50 ஆயிரம் ரூபாய் வழங்கி வைக்கப்பட்டது. குறித்த சுகாதார அறை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

# இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மாசி மக இலட்சார்ச்சனை எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையான பத்துத்தினங்களும் நடைபெறவுள்ளது.

10 ஆம் நாளான 27 ஆம் திகதி சனிக்கிழமை மாசிமகத்தன்று கலச அபிஷேகம், ஸ்வர்ணபத்ம புஷ்பார்ச்சனை என்பன இடம்பெற்று உள்வீதியுலா வருதலும் இடம்பெறவுள்ளது. (4-5)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நாயன்மார்கட்டு பாரதி மன்றம் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் நிலைய முன்றலில் இடம் பெறவுள்ளது. (5-4)

# யாழ்.இந்தியத் துணைத்தூதுவர்- வவுனியா வர்த்தகர்கள் சந்திப்பு



(கண்டாவளை)

வவுனியா வர்த்தகர்கள் தொடர்பாக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் மற்றும் வவுனியா வர்த்தக சங்கத்தினருக்கு இடையில் கலந்துரையாடல் நேற்று வவுனியா விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட வர்த்தகர்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் வர்த்தகர்கள் இந்தியாவிலிருந்து எவ்வாறான வியாபார நடவடிக்கையினை முன்னெடுக்க முடியும் மற்றும் அதற்குரிய ஆலோசனைகள் , வர்த்தக நிலைய உரிமையாளர்கள், ஊழியர்களுக்கான இலவச பயிற்சி நெறிகளை இந்தியாவிற்கு சென்று மேற்கொள்வதற்கான புலமைப்பரிசில்களை வர்த்தக சங்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளல், வர்த்தகர்கள் நலன்சார் பல்வேறு திட்டங்களை முன்வைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவரின் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தக சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.(5-4-250)


## INVITATION FOR BIDS(IFB)

**Valikamam South West Pradeshiya sabha,Manipay Council Fund Project**

1. The Chairman, Local Authority Procurement Committee on behalf of the Valikamam South West Pradeshiya Sabha, Manipay Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the following items.

**Tender Table**

| S.N | Item Description | Unit | Estimated Amount | Bid Security Amount (Rs) Valid till 11th May 2021 | Contract Period (Days) |
|---|---|---|---|---|---|
| 01 | Supplying Street Lamp 50W | 100 Nos | 5.0 Mn | 50,000.00 | 30 Days |
| 02 | Supplying Street Lamp 100W | 50 Nos | | | |
| 03 | Supplying Street Lamp – Monkey Cap | 2000 Nos | | | |
| 04 | Supplying LED Bulb – 15W | 2000 Nos | | | |

2. Bidding will be conducted through National Competitive Bidding. To be eligible for contract award the bidders shall not have been blacklisted and possess the valid certificate of Business Registration in the relevant field issued by a legal Authority.

3. Eligible interested bidders may obtain further information from Valikamam South west Pradeshiya Sabha, Manipay Jaffna TP .No: 021-225 6650 / 021-225 6647 on any working days from 09.00 hrs to 15.00 hrs A complete set of Bidding Documents in English language shall be referred or purchased by interested bidders on the submission of a written application with copy of Business Registration certificate to the **Chairman, Local Authority Procurement Committee Valikamam South West Pradeshiya Sabha** from 09th February 2021 until 23rd February 2021 from 9.00 hrs.to 15.00 hrs. Upon payment of a non-refundable fees of Rs. 1000/=. The method of payment should be by cash.

4. Bids must be accompanied by a Bid Security for the mentioned above Bank Draft. Bids shall be delivered in two copies by Registered Post to the address **Chairman, Local Authority Procurement Committee, Valikamam South West Pradeshiya Sabha, Manipay** or direct on or before 14.30 hrs. On 24th February 2021. Late Bids will be rejected.

5. Bids will be opened soon after closing in the presence of the Bidders or their representatives who choose to attend.

6. Bids shall be valid up to 77 days **12th May 2021**

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Valikamam South west Pradeshiya Sabha, Manipay.**
09.02.2021

(சி-1387)




சங்கானை லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் கீரிமலை கருகம்பனை இந்து இளைஞர் கழகம், தமிழ் மன்றம் சனசமூக நிலையம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து நடத்திய இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கருகம்பனை பொது நூலக மண்டபத்தில் இடம் பெற்றது. (படம்:- செ.ரவிசாந்)

# அவசர கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

வடமாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள NEC கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து தொண்டராசிரியர்களும் தவறாது தமது ஆவணப் பிரதிகளுடன் வருகை தருமாறு வடமாகாண தொண்டராசிரியர் சங்க நிர்வாகத்தலைவர்அறிவித்துள்ளார். (5-4)


## நல்லூர் பிரதேச சபை ஏலவிற்பனை அறிவித்தல்


**இடம்**: தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை
**காலம்:** 16.02.2021 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00
**ஏலப்பொருட்கள் :** பாவித்த அலுவலக பாவனைப்பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், வீம் தூண்கள், இரும்புப் பொருட்கள், மேசை பகுதிகள், வட்டக்கல், சீமேந்துக்கல், விளம்பர பலகைகள், முகட்டு ஓடு, பாவித்த ரயர், தீராந்தி, வேப்பம் விறகு, பாவித்த கைவண்டில்.

ஆர்வமுள்ளோர் ஏலப்பொருட்களை அலுவலக நாட்களில் 15.02.2021 பி.ப. 3.00 மணிக்கு முன்னர் பார்வையிடலாம் என்பதுடன் கட்டணம் செலுத்தி உரிய விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்து ஏலத்தில் கலந்து கொள்ளலாம். சித்தி பெறும் ஏலதாரர் அதற்கான பெறுமதியினை உடன் பணமாக செலுத்தி, அன்று மாலை 3.00 மணிக்கு முன்பாக பொருட்களை எடுத்துச்செல்தல் வேண்டும்.

**திரு.ப.மயூரன்**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

(சி-1388)

**08.02.2021**



பொத்துவில் முதல் பொலிகண்டி (P2P) அணிவகுப்புக்கு ஆதரவாக கனடாவின் டொரொண்டோ மற்றும் மொன்றியல் ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் நடந்த வாகன ஆர்ப்பாட்ட பேரணிகளில் பல்லாயிரக் கணக்கான வாகனங்கள் பங்கேற்றன.


# அ.தி.மு.க கொடியை சசிகலா பயன்படுத்தக்கூடாது

(சென்னை)

அ.தி.மு.க கொடியை சசிகலா பயன்படுத்தக்கூடாது என்றும் தமிழகத்திற்குள் 5 வாகனங்கள் மட்டுமே பின் தொடர்ந்து வர அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தி.மு.க. கட்சியில் அடிப்படை உறுப்பினராக இல்லாத சசிகலா, அ.தி.மு.க. கொடியை பயன்படுத்தக்கூடாது என முறைப்பாடு அளிக்கப்பட்டதை தொடர்ந்து கிருஷ்ணகிரி உட்கோட்டம் பொலிஸ் கண்காணிப்பாளர் சசிகலா உட்பட யாரும் அ.தி.மு.க. கொடியை பயன்படுத்தக் கூடாது என அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (நி-4)

# உத்தரகாண்ட் அனர்த்தம் ஒன்பது சடலங்கள் மீட்பு



(டில்லி)

இமயமலையில் பனிப்பாறையின் ஒரு பகுதி உடைந்து இரண்டு நீர்மின்சார ஆலைகளில் வீழ்ந்து நீர் மற்றும் குப்பைகளை வெளியிட்டதையடுத்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கியவர்களை மீட்க இந்திய மீட்புக் குழுவினர் போராடி வருகின்றனர்.

இந்த அனர்த்தத்தில் குறைந்தது ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதுடன், 150 பேர் காணாமல் போயுள்ளதாக மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (நி-4)

# நடிகர் சூர்யாவுக்கு கொரோனா



(சென்னை)

சூர்யாவின் குழந்தைகள் மும்பையில் பாட்டி வீட்டில் உள்ளனர். அவர்களை பார்ப்பதற்காக சில தினங்களுக்கு முன்பு மும்பை சென்றார். கடந்த திங்கட்கிழமை மும்பையில் இருந்து சென்னை திரும்பினார்.

இதன்போது அவருக்கு திடீர் உடல்நல குறைவு ஏற்பட்டது. பரிசோதனையில் சூர்யாவுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானது. இதையடுத்து சென்னை வடபழனியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி-4)

# கனடாவில் வசிக்கும் இந்திய ராஜதந்திரிகளின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு ட்ரூடோ பணிப்பு

(ஒட்டாவா)

இந்தியப் பிரதமர் மோடி மற்றும் கனடாவில் பணியாற்றும் இந்திய தூதரக அதிகாரிகளுக்கும் கனடாவில் வசிக்கும் காலிஸ்தான் ஆதரவாளர்கள் கொலை மிரட்டல் விடுத்தது ஏ்ளளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து கனடாவிலஉள்ள இந்திய தூதரக அதிகாரிகள் மற்றும் இராஜதந்திரிகளின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ உத்தரவிட்டுள்ளார்.

இந்திய மத்திய அரசின் புதிய விவசாய சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்திய விவசாயிகள், தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அதேநேரத்தில் விவசாய சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்தியாவில் போராடும் விவசாயிகளுக்கு ஆதரவாகவும் கனடாவில் காலிஸ்தான் ஆதரவு அமைப்பினர், ஆங்காங்கே போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் கடந்த டிசெம்பர், 26ஆம் திகதி ஒட்டாவாவில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் வான்கூவரில் உள்ள துணை தூதரகத்தின் அதிகாரிகளுக்கு, கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது. இது குறித்து கனேடியப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதன்பின் சமீபத்தில் வான்கூவரில் உள்ள இந்திய துணை தூதரகத்திற்கு வெளியே காலிஸ்தான் ஆதரவாளர் ஒருவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு, கொலை மிரட்டல் விடுத்தார்.

இந்நிலையில் இது குறித்து கனேடிய வெளிவிவகார அமைச்சருடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இதனையடுத்தே ஒட்டாவா மற்றும் வான்கூவரில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். அத்துடன், கொலை அச்சுறுத்தல் விடுத்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி-4)



மியன்மாரின் இரண்டாவது மிகப்பெரிய நகரமான யாங்கூனில் மக்கள் பெருந்திரளாக கூடி, இராணுவ ஆட்சிக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். ஆங் சான் சூகி உள்ளிட்ட தலைவர்களை விடுதலை செய்யவும் வலியுறுத்தினர். தொடர்ந்து, இரண்டாவது நாளாக நேற்றும் யாங்கூனில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு ராணுவ ஆட்சிக்கு எதிராக போராட்டங்களை நடத்தி அதிர வைத்தனர்.

# ஐ.நா.மனித உரிமைப் பேரவையுடன் மீண்டும் இணையும் அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனின் நிர்வாகம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையுடன் மீண்டும் இணைவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்நாட்டு வெளியுறவுத் துறையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

2021ஆம் ஆண்டின் இறுதி வரை, அமெரிக்காவால் வாக்களிக்காத பார்வையாளர் அந்தஸ்தை மட்டுமே தற்சமயம் வைத்திருக்க முடியும் என்ற நிலையில், பிடன் நிர்வாகத்தின் இத் தீர்மானம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் வோஷிங்டன் முழு உறுப்பினர் இடத்தைப் பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

பல சர்வதேச அமைப்புகள் மற்றும் ஒப்பந்தங்களிலிருந்து விலகுவதற்கான தனது முடிவுகளுக்கு பங்களித்த குடியரசுக் கட்சியின் ட்ரம்ப், 2018 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலகினார்.

இஸ்ரேலுக்கு எதிராக பக்கச்சார்பாக செயற்படுவதாகக் குற்றம்சாட்டி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிலிருந்து அமெரிக்கா இந்த முடிவினை எடுத்திருந்தது.

47 உறுப்பினர்களைக் கொண்ட ஜெனிவாவை தளமாகக் கொண்ட சபையின் அடுத்த அமர்வு இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

## கோட்டாவை காப்பாற்றியது நானே பகிரங்கப்படுத்தினார் பொன்சேகா

(கொழும்பு)

எதிரிக்கு முன்னால் திறந்த வெளியைகடப்பது ஆபத்தானது என்பதை நான் மீண்டும் கோட்டாபயவுக்கு நினைவுபடுத்துகிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தனது சமூக வலைத்தளப் பதிவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு எச்சரிக்கை விடுத்து குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

1991 இல் யாழ்ப்பாணக் கோட்டையைக் காப்பாற்று வதற்கான போரில், நீங்கள் எதிரிக்கு முன்னால் நிறுத்தப்பட்டு திறந்த வெளியைக் கடந்து ஆபத்தில் சிக்கியபோது, உங்களையும் உங்கள் படையணியையும் நான் உட்பட முதலாவது சிங்கப்படைப் பிரிவினர் காப்பாற்றினோம்.

இன்று, 30 ஆண்டுகளுக்குப் பின்னர், 2021 இல், அரசியல் அரங்கில், நீங்கள் மீண்டும் அதே தவறை செய்ய மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

உங்கள் முகாமின் கட்டளையும் கட்டுப்பாடும் உடைந்துவிட்டது என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது. உங்களுக்கு வாக்களித்த 69 மில்லியன் மக்களை கேலி செய்வதன் மூலம், நீங்கள் அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. உங்கள் அதிகாரப் பசி ஆட்சி அந்த சக்தியால் அழிக்கப்படும்.

எனவே, கோட்டாபயவுக்கு எனது அறிவுரை என்னவென்றால், நாடு பெரும் நெருக்கடியில் இருக்கும் நேரத்தில், நான் உட்பட பொது எதிர்க்கட்சியின் அரசியல் தலைவர்கள் மற்றும் நண்பர்களின் ஜனநாயக உரிமைகளை பறிக்கக்கூடாது, மேலும் இது பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகளை அதிகரிக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

## பத்திரிகை பேரவை சட்டத்தை மாற்றியமைக்க முன்மொழிவுகள் கோரல்

(கொழும்பு)

இலங்கை பத்திரிகை பேரவைச் சட்டத்தை திருத்தியமைப்பதற்காக ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட சிவில் பிரஜைகளின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை வெகுசன ஊடக அமைச்சு கோரியிருக்கிறது.

இது தொடர்பில் அமைச்சின் செயலாளர் நேற்று திங்கட்கிழமை விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள இலங்கை பத்திரிகை பேரவையை "கட்டமைப்பு ரீதியில் மறுசீரமைத்து அச்சு, இலத்திரனியல் மற்றும் புதிய ஊடகங்களை உள்ளடக்கிய வகையில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் தொடர்பில் தீர்ப்பளிக்கும் நிறுவனமாக மீளமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பொருட்டு தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தை திருத்தியமைப்பதற்காக ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட சிவில் பிரஜைகளின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு வெகுசன ஊடக அமைச்சு உத்தேசித்துள்ளது.

எனவே திருத்தப்படும் சட்டவரைபில் உள்ளடக்குவதற்கு பொருத்தமான சமகால முன்மொழிவுகளை மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்புடைய வரைபை தயாரிக்கும் செயற்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்காக, செயலாளர், வெகுசன ஊடக அமைச்சு , இல.163 , எசிதிசி மெதுர, கிருளப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு 5 எனும் முகவரிக்கு அல்லது secretary@media.gov.lk,ad.secdev.media @ gmail.com, Legaldiv@g mail.com என்ற மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்பி வைக்க முடியும். (நி-4)

## கோதுமை மாவின் விலையை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

புதிய விலையின் பிரகாரம் கோதுமையினை விற்பனை செய்தால் கோதுமை மா உற்பத்தி நிறுவனங்கள் பெரும் நட்டத்தை எதிர் கொள்ள நேரிடும். ஆகவே நிர்ணயிக்கப்பட்ட புதிய விலையினை ஆறு அல்லது ஏழு ரூபாவால் அதிகரிக்குமாறு கோதுமை மா உற்பத்தி நிறுவன உரிமையாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல், அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவிற்கும் பிரதான நிலை கோதுமை மா உற்பத்தி நிறுவனங்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நேற்று அமைச்சின் காரியாலயத்தில் இடம் பெற்ற போது இக் கோரிக்கை விடுக்கப்பட்டது. (நி-4)

## பூர்வீகக் காணிக்கான உரிமை கோரி ஆதிவாசிகளின் தலைவர் மனுத்தாக்கல்

(கொழும்பு)

ஆதிவாசிகளின் பூர்வீக காணிகளை கையகப்படுத்தி முன்னணி நிறுவனங்களுக்கு சோளச்செய்கை மேற்கொள்வதற்காக வழங்கப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்குரிய உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோ மற்றும் சுற்றாடல் நீதிக்கான மையத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சுற்றாடல் அமைச்சின் செயலாளர், வனஜீவராசிகள் அமைச்சர், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தங்களுடைய மக்கள் நூற்றாண்டு காலமாக பயன்படுத்தி வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்காக பாதுகாத்த வனத்தில், ஐயாயிரம் ஏக்கருக்கும் அதிக நிலப்பரப்பை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை கையகப்படுத்தி பாரயளவிலான சோளச் செய்கைக்கு வழங்குவதால் தமது வாழ்வாதாரம் இழக்கப்படுவதாக ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோ மற்றும் சுற்றாடல் நீதிக்கான மையத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-4)

## பி.சி.ஆர்.பரிசோதனை உபகரணங்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் கிடையாது



(கொழும்பு)

பி.சி.ஆர்.பரிசோதனை உபகரணங்களுக்கு எவ்விதத் தட்டுப்பாடும் கிடையாது என ஆரம்ப சுகாதார சேவைகள் மற்றும் கொரோனாக் கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

பரிசோதனைகள் மேற்கொள்பவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் பி.சி.ஆர் .பரிசோதனைகள் மேற்கொள்வது குறைவடைந்துள்ளதே தவிர பி.சி.ஆர்.பரிசோதனை உபகரணங்களுக்கு எந்தவிதத் தட்டுப்பாடும் கிடையாது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அன்றாடம் நாட்டில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர்.பரிசோதனைகள் கடந்த சில தினங்களாக குறைவடைந்துள்ளன.

கடந்த ஜனவரி மாதம் முதல் பகுதியில் 18 ஆயிரமாக இருந்த பி.சி.ஆர்.பரிசோதனை கடந்த சில தினங்களாக 15 ஆயிரமாக குறைவடைந்துள்ளன.

இரசாயன கூட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அத்துடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஆறு இரசாயன கூட ஊழியர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அங்குள்ள இரசாயன கூடத்தில் பெருமளவு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் தற்போது அவை குறைவடைந்துள்ளன.

அதேவேளை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர்.பரிசோதனைகளும் குறைவடைந்துள்ளன.

ஏனெனில் அந்த பல்கலைக்கழகத்தின் இரசாயன பிரிவினர் வேறு ஆராய்ச்சிகளில் தற்போது ஈடுபட்டுள்ளனர். எவ்வாறாயினும் அந்த நிலையை சீர்செய்வதற்கு ஏனைய இரசாயன கூடங்கள் ஊடாக செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## நாவலப்பிட்டிய பாடசாலையில் 15 மாணவர்களுக்கு தொற்று

(கொழும்பு)

நாவலப்பிட்டிய - வேஸ்ஹோல்ட் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 15 மாணவர்களுக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பி.சி.ஆர் .பரிசோதனைகள் நடத்தப்பட்டிருந்தன.

இவ்வாறு நடத்தப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளின் அறிக்கையில் மாணவர்ளுக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (நி-4)

## போலி ஆவணங்களை தயாரித்து விற்பனையில் ஈடுபட்டவர் கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களை தயாரித்து வாகன விற்பனையில் ஈடுபடுகின்ற ஒருவர் கடுவலை பகுதியில் வைத்து கைது செய் யப்பட்டுள்ளார்.

மிரிஹான விசேட விசாரணை பிரிவினரால் அவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இவ்வாறு போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மேலும் சில வாகன மோசடிகள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

## மத்தளவிற்கு இதுவரை 2500 சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் இதுவரையான காலப்பகுதியில் மத்தள சர்வதேச விமான நிலையத்திற்கு 2500 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாத் துறையின் மீட்புத் திட்டத்தின் பேரில் கசகஸ்தானின் அஸ்தானா விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், 160 சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு அழைத்து வந்ததன் பிரதிபலனாகவே சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-4)



நுவரெலியா மாவட்டத்திலுள்ள நானுஓயா, எடின்புரோ தோட்டத்திற்கு மேற்பகுதியில் உள்ள அரசாங்க வனப்பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்ட சேனையொன்றை நுவரெலியா பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் மாலை சுற்றி வளைத்துள்ளனர். குறித்த கஞ்சா சேனையில் 272 கஞ்சா செடிகள் இருந்தன. அவற்றை தீயிட்டு அதிரடிப் படையினர் அழித்தனர்.

# சுயாதீன மனித உரிமை ஆணைக்குழுவின் செயலராக சிவஞானசோதி நியமனம்



(கொழும்பு)

சுயாதீன மனித உரிமை தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளராக முன்னாள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் அமைக்கப்பட்ட மனித உரிமை தொடர்பான ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்து அரசாங்க கொள்கைக்கு அமைவாக அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளுதல் இந்த ஆணைக்குழுவின் நோக்கமாகும்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பல்வேறுபட்ட அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் செயலாளராகக் கடமையாற்றியவரும் தற்போது பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகக் கடமையாற்றி வருபவருமான வே.சிவஞானசோதியே இந்த ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த ஆணைக்குழுவில் உயர் நீதிமன்ற நீதியரசர் உள்ளடங்கலாக மூன்று உறுப்பினர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பி.சி.ஆர்.



(கொழும்பு)

பாராளுமன்ற வளாகத்தில் மேற்கொள்ளப்படும் எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனை செயற்பாடுகளில் கலந்து கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுப்பதாக பாராளுமன்ற படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரையில் பாராளுமன்ற வளாகத்தில் குறித்த எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# நாட்டின் சுயாதீனத் தன்மையை விட்டுக் கொடுக்க மாட்டோம்

## பிரதமர் சூளுரை



**(கொழும்பு)**

**யுத்தத்தை வெற்றி கொண்ட இராணுவத்தினரை நல்லாட்சி அரசாங்கம் ஜெனிவாவில் குற்றவாளியாக்கியது. பல நெருக்கடிகளை எதிர்க்கொள்ள நேரிடும் என்பதை நன்கு அறிந்து நாட்டுக்கு எதிரான பிரேரணையில் இருந்து விலகினோம். எவ்வாறான நெருக்கடி ஏற்பட்டாலும் நாட்டின் சுயாதீனத்தன்மையை விட்டுக் கொடுக்கமாட்டோம். நாட்டின் உரிமை நாட்டு மக்களுக்கே வழங்கப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

சியம்பலான்டுவ பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மத நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் மேலும் குறிப்பிடுகையில்,

பௌத்த சாசனத்தை முன்னிலைப்படுத்தி அரச நிர்வாகம் முன்னெடுக்கப்படுகிறது. நாட்டின் நன்மைக்கு சர்வ மதங்களின் ஆசீர்வாதம் அவசியமாகும். அனைத்து மதத்தின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது. பௌத்த சாசனத்துக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கம் செயற்பட்டது. இதனால் கடந்த காலங்களில் மதங்களுக்கிடையில் பாரிய பிணக்கு ஏற்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் ராஜபக்ஷ பெயருடன் தொடர்புடையவர்களையும் எமது ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகளையும் நல்லாட்சி அரசாங்கம் அரசியல் பழிவாங்கல்களுக்குட்படுத்தியது. பௌத்த மதத்துக்கும், பௌத்த மத தலைவர்களுக்கும் எதிராக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட பௌத்த சாசனத்தை பாதுகாக்க வேண்டிய எதிர்பார்ப்பு அனைத்து தரப்பிலும் காணப்பட்டது. இவ்வாறான நிலையில் 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. பௌத்த சாசனத்தை பாதுகாக்க புதிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. பிக்குகளின் பெற்றோருக்கு வீடு வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

30 வருட கால யுத்தம் பொருளாதாரம், சமூகம், நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. முடிக்க முடியாது என்று குறிப்பிட்ட யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து குறுகிய காலத்தில் உட்கட்டமைப்பு, அபிவிருத்தி, பொருளாதாரம் ஆகியவற்றை ஒருசேர முன்னேற்றமடைய செய்தோம்.

இறுதியில் யுத்தத்தை வெற்றி கொண்ட இராணுவத்தினரை நல்லாட்சி அரசாங்கம் ஜெனிவாவில் குற்றவாளியாக்கியது.

நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை நன்கறிந்து நாட்டுக்கு எதிரான பிரேரணையில் இருந்து விலகினோம். நாட்டின் சுயாதீனத்தன்மைக்கான நெருக்கடியான பல தீர்மானங்களை எடுத்துள்ளோம். நாட்டின் உரிமையை நாட்டு மக்களுக்கே வழங்குவோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குருதியின் வகைகள்!

எல்லோர் உடம்பிலேயும் ஒரே இரத்தம் தான். இருந்தாலும் இந்த இரத்தத்திலே பல வகையுண்டு. இது இன்றைக்குப் பலபேருக்குத் தெரிந்த ஒரு செய்தி. இரத்தத்திலே பல வகையுண்டு என்பதை முதலிலே கண்டு பிடித்தது யார் தெரியுமா?

1890 களில் கார்ல் லாண்ட் ஸ்டீனர் (Karl Land Steiner) என்ற ஆஸ்திரிய நோயறி நிபுணர் (Pathologist) தான் அதைக் கண்டு பிடித்தார்.

அதற்கு முன்னர் சரியாக விபரம் தெரியாமல் ஒரு மனிதனுடைய இரத்தத்தை எடுத்து இன்னொரு மனிதனுக்குச் செலுத்தும் போது ஆபத்து ஏற்பட்டிருக்கு. இதன் காரணமாக சில நாடுகளிலே இப்படி இரத்தம் செலுத்துவதை தடை செய்யக் கூடிய சட்டம் எல்லாம் இயற்றியிருக்கின்றார்கள். பழங்காலத்திலேயெல்லாம் மருத்துவர்கள் இரத்த இழப்பினால் வலுக் குறைந்தவர்களுக்கு விலங்குகளின் இரத்தத்தைக் கூட செலுத்திப் பார்த்திருக்கின்றார்கள். அதனால் ஆபத்துத் தான் ஏற்பட்டுவிட்டது.

கார்ல் லாண்ட் ஸ்டீனர் என்ற இந்த நிபுணர் இரத்த வகைகளைக் கண்டு பிடிக்கின்ற வரைக்கும் சிக்கல் தான். இவர் இன்னும் பல உண்மைகளையும் கண்டு பிடித்தார்.

ஒரு வகை இரத்தத்தை இன்னொரு வகை இரத்தத்துடன் கலக்க விட்டால் பல சமயம் இடைஞ்சல் வந்து விடுகின்றது. ஒரு மனிதருடைய இரத்தத்தை வேறு ஒரு மனிதரின் இரத்தத்திலிருந்து எடுக்கப்பட்ட சீரத்துடன் கலந்தால் முதல் இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் ஒன்றுகூடி கட்டி கட்டியாக ஆகிவிடுகின்றது. இதையும் அவர் தான் கண்டு பிடித்தார்.

உடம்புக்குள்ளே இது மாதிரி நடந்தால் இரத்தம் செலுத்தப்பட்டவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும். ஆனாலும் சில வகை இரத்தங்களை ஒன்றோடு ஒன்று கலந்தால் இது மாதிரி ஆவதில்லை என்பதையும் அவர் கண்டு பிடித்தார்.

1902 இலே தான் அவர் மனித இரத்தத்திலே A, B, AB, O இப்படி நான்கு வகை இருக்கிறதைக் கண்டு பிடித்து வெளியிட்டார். ஒவ்வொரு மனித உடலிலேயும் இதிலே ஒரு வகை இரத்தம் இருக்கும்.

ஒரு வகை இரத்தத்தை அதே வகை இரத்தமுள்ள மனிதர்களின் உடம்பிலே செலுத்தினால் கெடுதல் ஏற்படாது. O வகை இரத்தத்தை எல்லா வகை இரத்தம் உள்ளவர்களுக்கும் செலுத்தலாம். A அல்லது B வகை இரத்தத்தை AB வகை இரத்தமுள்ளவர்களுக்குச் செலுத்தலாம்.

ஆனால் AB வகை இரத்தத்தை A வகை அல்லது B வகை இரத்தம் உள்ளவர்களுக்குச் செலுத்தக் கூடாது. O வகை இரத்தம் உடையவர்களுக்கு ஏனைய இரத்தங்களைச் செலுத்தக் கூடாது. AB ஆகிய வகை இரத்தங்களையும் கலக்கக் கூடாது.

இந்தக் கண்டு பிடிப்புக்காக லாண்ட் ஸ்டீனருக்கு 1930 இல் மருத்துவம் மற்றும் உடல் செயல் இயலுக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது. இன்றைக்கு அறுவை சிகிச்சைகள் எல்லாம் சர்வசாதாரணமாக நடக்கிறதற்கு. அந்த டாக்டரின் கண்டு பிடிப்பு எவ்வளவு உதவியாக இருக்கின்றது. ஒரு அறுவை சிகிச்சை தியேட்டர் உள்ளே ஒரு அறுவைச் சிகிச்சை நடந்து கொண்டிருக்கு.

அந்த அறுவைச்சிகிச்சை தியேட்டர் வாசலில் இரண்டு பெண்கள். மிகவும் பதற்றத்துடன் உட்கார்ந்திருக்கின்றார்கள். ஒரு பெண் இன்னொரு பெண்ணைப் பார்த்துக் கேட்டார்...நீ ஏம்மா இப்படி பதற்றத்துடன் உட்கார்ந்திருக்கின்றாய் என்று.

அதற்கு அந்தப் பெண் சொன்னார்...உள்ளே அறுவை சிகிச்சை செய்து கொள்ளப் போனவர் என் வீட்டுக்காரர். இது வரைக்கும் அவருக்கு எந்த நோயும் வந்ததில்லை. இதுதான் முதல் அறுவைச் சிகிச்சை. அது நல்லபடியாக முடியவில்லை என்றால் எதிர்காலம் என்ன ஆகுமோ என்று பயமாக இருக்கு என்றார் அந்தப் பெண்.

இந்த அறுவைச் சிகிச்சை நல்லபடியாக முடியவில்லை என்றால் என்னுடைய எதிர்காலம் என்ன ஆகுமோ என்று தான் நானும் பயந்து கொண்டிருக்கின்றேன் என்றார் ... பெண். நீ யாரு? என்று கேட்டார் முதல் பெண்.


உள்ளே அறுவைச் சிகிச்சை செய்யப் போகின்ற டாக்டர் என் வீட்டுக்காரர். அவருக்கும் இதுதான் முதல் அறுவைச் சிகிச்சை என்றார் அந்தப் பெண்.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)

20


## கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 51 சபைகளில் தனித்தும் ஏனையவற்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி இன் கீழும் போட்டியிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2 சபைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி இன் கீழும் 40 சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கீழும் போட்டியிட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய இரண்டு பிரதேச சபைகளுக்குரிய வாக்கெடுப்பு நடத்தப்படும் தினமாக தெரிவத்தாட்சி அலுவலர்களினால் 2011.12. 28 ஆம் திகதிய 1738/6 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலூடாக நிர்ணயிக்கப்பட்ட 2012.03.10 ஆம் திகதி, 2012.03.24 ஆம் திகதி என 1744/8 ஆம் இலக்க 2012.02.08 ஆம் திகதிய வர்த்தமானியூடாக விதிக்கப்பட்டது.

இதற்கமைய இத் தேர்தல் 2012 மார்ச் மாதம் 24 ஆம் திகதி நடத்தப்படத் தீர்மானிக்கப்பட்டது.

ஆயினும், தேர்தல் நடத்தப்படுவதை சவாலுக்குட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 2012. 03.12 ஆம் திகதி CA(Writ) 72/ 2012 மற்றும் CA(Writ) 74/2012 ஆம் இலக்க மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதோடு, 2012. 09.13 முதல் இம்மனுக்களைக் கருத்திலெடுத்துக் கொண்டு மேன் முறையீட்டு நீதிமன்றம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்தச் சூழ்நிலை காரணமாக இடம்பெயர் முகாம்களில் வதிகின்ற மக்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் முடிவடையும் வரை தேர்தலை ஒத்திவைக்குமாறு இடைக்காலத் தடையுத்தரவொன்று பிறப்பித்தது.

2007 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு பாதுகாப்புக் காரணங்களினால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்தின் மட்டக்களப்பு மாநரகர சபை, ஏறாவூர் பற்று பிரதேச சபை, கோரளைப்பற்று பிரதேச சபை, கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபை, மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபை, மண்முனை பிரதேச சபை, மண் முனை மேற்கு பிரதேச சபை, மண்முனை தென்மேற்கு பிரதேச சபை மற்றும் போரதீவு பற்று பிரதேச சபை ஆகிய உள்ளூர் அதிகார சபைகள் சார்பாக 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்பட்டதோடு, இச்சபைகளின் பதவிக்காலம் 2012 மார்ச் மாதம் 10 ஆம் திகதியன்று முடிவடையவிருந்தது.

ஆயினும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் அமைச்சரினால் 2011. 12.19 ஆம் திகதிய 1737/5 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினூடாக இவற்றின் பதவிக்காலம் 2013 மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

உள்ளூர் அதிகார சபை தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்) 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினூடாக 2012 நவம்பர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து திருத்தப்பட்டுள்ளது. அதற்கமைய 2012 ஆம் ஆண்டிற்குள் மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் வெற்றிடங்களை நிரப்பியமை மாத்திரம் நடைபெற்றது.

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 அத்தியாயம்) அமைய எதிர்வரும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் வட்டார அடிப்படையில் நடத்தப்பட வேண்டுமெனவும் அதற்காக நியமனம் செய்யப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் எழுந்த சிக்கலான நிலைமைகளின் அடிப்படையில் வட்டார நிர்ணயம் இதுவரை நிறைவடையாமை மற்றும் தேர்தலொன்றை நடத்துவதற்குச் சாத்தியமான விதத்தில் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திற்குத் தேர்தல்கள் ஆணையாளரால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் இதுவரை மேற்கொள்ளப்படாமையால் தேர்தலை நடத்துவது சிக்கல்மிக்க நிலைமைக்குள்ளாகியுள்ளது. புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமை பற்றி அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

முற்றும்.

**உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் முடிவுகள் - 2011**

| கட்சியின் பெயர் | உள்ளூராட்சிச் சபைகள் | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | மாநகர | நகர | பிரதேச | |
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி | 17 | 29 | 225 | 271 |
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | - | 5 | 25 | 30 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2 | 5 | 3 | 10 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1 | - | 4 | 5 |
| தேசிய காங்கிரஸ் | 1 | - | 1 | 2 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | - | - | 2 | 2 |
| மலையக மக்கள் முன்னணி | - | - | 1 | 1 |
| சுயேட்சைக் குழு | - | - | 1 | 1 |
| மொத்தம் | 21 | 39 | 262 | 322 |

# கொரோனா தனிமைப்படுத்தல் கண்காணிப்புக் காலம் குறைக்கப்படுகிறது

(கொழும்பு)

**இலங்கையில் அறிகுறியற்ற கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளை தனிமைப்படுத்தல் மையத்தில் வைத்துக் கண்காணிக்கும் காலம் 14 இல் இருந்து 10 நாட்களாக குறைக்கப்படுகிறது.**

எனினும் மீதமுள்ள 4 நாட்கள் அவர்கள் வீடுகளில் தம்மைத்தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது சுகாதார அமைச்சின் தலைமை தொற்றுநோயியல் நிபுணர் டாக்டர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்தார்.

தொற்று உறுதிப்படுத்தப்படும் நோயாளிகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட்ட நாளில் இருந்து இந்த 10 நாட்கள் கணக்கிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்றுக்குள்ளான ஒருவரிடம்இருந்து ஏனையவர்களுக்கு வைரஸ் பரவும் ஆபத்து 10 நாட்களுக்குப் பிறகு மிகக் குறைவு என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த ஆபத்தான 10 நாட்களுக்கு பாதிக்கப்பட்ட நபர்களை தனிமைப்படுத்தல் மையங்களில் வைப்போம் எனவும் சுதத் சமரவீர கூறினார். (நி-4)

# தனியார் பேருந்து உரிமையாளர்களின் போராட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

தனியார் பேருந்து உரிமையாளர்களால் முன்னெடுக்கப்படவிருந்த பணிப் புறக்கணிப்பு ஒரு வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினருக்கும் நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலுக்கும் இடையில்நேற்றுக்காலை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் 6 கோரிக்கைகளுக்கு ஒருவார காலத்துக்குள் தீர்வு வழங்காவிடின் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

லீசிங் வசதிகளை வழங்கல், நிவாரணக் கடன் வழங்கல் தொடர்பான தனியார் பேருந்து உரிமையாளர்களின் பிரச்சினைகளுக்கு வியாழக்கிழமைக்குள் தீர்வு வழங்குவதாக இராஜாங்க அமைச்சர் வாக்குறுதி வழங்கியிருப்பதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

எனினும் கோரிக்கைகளுக்கு ஒருவாரகாலத்துக்குள் தீர்வு வழங்காவிடின் தொடர் பணிப்புறக்கணிப்பில்ஈடுபடுவோம்எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# யாழில் காலூன்ற முயற்சிக்கும் சீனா கடும் எதிர்ப்பை வெளியிட்ட இந்தியா

(கொழும்பு)

**யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள மூன்று தீவுகளை சீன நிறுவன மொன்றுக்கு மின் திட்டங்களை ஆரம்பிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் வழங்கவுள்ளதற்கு இந்தியா தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது.**

நெடுந்தீவு, அனலைதீவு, மற்றும் நயினாதீவு ஆகிய மூன்று தீவுகளில் மின் உற்பத்தித் திட்டங்களை தொடங்கவே சீன நிறுவனத்திற்கு அனுமதியளிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கும் ஜப்பானுக்கும் வழங்க வேண்டாம் என்று அமைச்சரவை முடிவு செய்வதற்கு முன்பே இது தொடர்பில் இந்தியாவிலிருந்து கடும் எதிர்ப்பு வெளிப்பட்டதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

சீன நிறுவனத்திற்கு வழங்கும் நடவடிக்கை தனது நாட்டின் பாதுகாப்பு தொடர்பான கவலைகளை எழுப்புகிறது என்ற அடிப்படையில் இந்தியாவின் எதிர்ப்பு இருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. நெடுந்தீவு இந்திய கடலோர நகரமான ராமேஸ்வரத்திலிருந்து 48 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## கஷ்டங்களை போக்கும் காயத்ரி மந்திரம்

"மந்திரங்களில் நான் காயத்ரி மந்திரமாக இருக்கிறேன்" என்று பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறியிருக்கிறார். அந்த அளவுக்கு காயத்ரி மந்திரம் உயர்வானது. சிறப்பு வாய்ந்தது.

இது மகரிஷி விஸ்வாமித்திரர் உபதேசித்த மந்திரம் என்று கூறப்படுகிறது.

ஓம்<br>
பூர்புவ ஸ்வஹ<br>
தத் ஸ்விதுர் வரேணியம்<br>
பர்கோ தேவஸ்ய தீமஹி<br>
தியோ யோநஹ ப்ரசோதயாத்

இதுதான் காயத்ரி மந்திரமாகும். இதன் பொருள் என்ன தெரியுமா?

"பூ உலகம், மத்திய உலகம், மேல் உலகம் மூன்றுக்கும் சக்தியான அந்தப் பரம ஜோதி சொரூபமான சத்தியத்தை நான் தியானிக்கிறேன். அந்தப் பரம சக்தி ஒளி என் அறிவைத் தூண்டி என்னை உண்மையை அறிந்த நிலைக்கு உயர்த்தட்டும்" என்பதாகும்.

காயத்ரி மந்திரம் சூரியனை குறித்தே உருவாக்கப்பட்டது என்பது சிலரது வாதமாகும். ஆனால் பரம்பொருளிடம் வேண்டுவதாகவே இது உள்ளது என்பது பெரும்பாலானவர்களின் கருத்தாகும்.

காயத்ரி மந்திரம் உலகுக்குப் பொதுவானது. பொதுவான பரம்பொருளை தியானிக்க சொல்வதால் எல்லோரும் இந்த மந்திரத்தை உச்சரித்துப் பயன் பெறலாம்.

காலை, மதியம், மாலை மூன்று நேரமும் காயத்ரி மந்திரம் சொல்வது நல்லது. ஆலய வழிபாடுகளின்போது ஒவ்வொரு சந்நிதியிலும் இறை மூர்த்தத்துக்கு ஏற்ப காயத்ரி மந்திரம் சொன்னால் உயர்ந்த பலன்கள் கிடைக்கும்.

காயத்ரி மந்திரத்தை நம் இஷ்டத்துக்கு உச்சரிக்கக்கூடாது. 5 இடங்களில் நிறுத்தி ஜெபிப்பதே சரியான முறையாகும்.

முதலாவது நிறுத்தம் - ஓம் இரண்டாவது நிறுத்தம் - பூர் புவஸ்வஹ. மூன்றாவது நிறுத்தம் தத் ஸ்விதுர் வரேண்யம்.

நான்காவது நிறுத்தம் - பர்கோ தேவஸ்ய தீமஹி. ஐந்தாவது நிறுத்தம் - தியோ யோ நஹ ப்ரசோதயாத் என்று இருத்தல் வேண்டும்.

காயத்ரி மந்திரத்தை முதலில் சொல்லத் தொடங்கும் போது 9 தடவை சொல்ல வேண்டும். அடுத்த வாரம் அதை 18 ஆக உயர்த்த வேண்டும். மூன்றாவது வாரம் 27 தடவை சொல்ல வேண்டும்.

இப்படி ஒன்பது ஒன்பதாக உயர்த்தி தினமும் காயத்ரி மந்திரத்தை 108 தடவை சொல்லும் வகையில் உங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

காயத்ரி மந்திரம் 27 அட்சரங்களைக் கொண்டது. இது ஏற்படுத்தும் ஒலி அதிர்வுகள் மிக மிக சக்தி வாய்ந்தவை.

காயத்ரி மந்திரத்தில் இருந்துதான் வேதங்கள் தோன்றின. எனவே வேதங்களுக்கு மூலமாக காயத்ரி மந்திரம் கருதப்படுகிறது. காயத்ரி மந்திரம் எப்படி தோன்றியது என்ற கேள்வி உங்கள் மனதில் ஏற்படலாம்.

ஒரு சமயம் ஞானம் பெற விரும்பிய முனிவர்கள் வேதக் கடலைக் கடந்தனர். அப்போது "த்ரயீ" என்ற வேதசாரம் கிடைத்தது. அதைக் காரணமதி எனும் மத்தினால் கடைய அது காயத்ரி வடிவமாக உருவம் பெற்றது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## இதுவரை 61 ஆயிரத்திற்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி

(கொழும்பு)

இலங்கையில் நேற்று முன்தினம் மேலும் ஆயிரத்து 625 சுகாதார பிரிவினருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து, இதுவரை நாட்டில் ஒரு இலட்சத்து 61 ஆயிரத்து 773 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. கடந்த மாதம் 29 ஆம் திகதி இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## முடக்கத்தில் இருந்து சில பகுதிகள் விடுவிப்பு

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்று பரவலால் முடக்கப்பட்டிருந்த சில பகுதிகள் நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஐந்து மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக கொவிட்-19 பரவல் தடுப்பு தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானி, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி, பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோதமிபுர அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதி, கோதமிபுர 24 மற்றும் 78 ஆம் தோட்டங்கள், வேலுவன வீதி ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், பூகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரிமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட, மினுவாங்கொட பொலிஸ் பிரிவின் கல்லொலுவ பகுதியின் ஜும்மா மஸ்ஜிட் மாவத்தை, இத்ரா மாவத்தை, புதிய வீதி மற்றும் அகுரகொட ஆகிய பகுதிகளும் அம்பலாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவின் பொலான தெற்குப் பகுதியும் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 350 | 320 | 280 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 700 | 90 | 650 | 800 |
| தக்காளி | 200 | 220 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 70 | 40 |
| கோவா | 100 | 80 | 100 | 100 |
| கரட் | 160 | 250 | 230 | 280 |
| பூசணி | 120 | 140 | 130 | 160 |
| புடோல் | 200 | 200 | 200 | 160 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 500 | 450 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80-100 | 120 |
| பாகற்காய் | 180 | 250 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 240 | 240 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு. | 100 | 120 | 120 | 140 |
| பயற்றங்காய் | 180 | 200 | 200 | 240 |
| லீக்ஸ் | 100 | 140 | 150 | 160 |
| பீற்றூட் | 200 | 250 | 220 | 240 |
| கறிமிளகாய் | 300 | 350 | 350 | 400 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 160 | 180 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 350 | 350 | — | 240 |
| கீரை - 1 பிடி | 80 | 90 | 80 | 80 |
| தேசிக்காய் | 100 | 140 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 220 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 280 | 320 |
| முள்ளங்கி | 150 | 120 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 30 | 20 |
| ஈரப்பலா | 150 | 100 | — | 80 |



# சிறுவர் அரங்கம்

## ஒற்றுமையே பலம்

கோவில் கோபுரத்தில் சில ஊதா நிறப் புறாக்களும் சில மஞ்சள் நிறப் புறாக்களும் அடைக்கலமாகி இருந்து வந்தன.

கோபுரத்தில் திருவிழா வேலைகள் தொடங்க ஆரம்பித்ததால் இது நாள் வரை எதிரும் புதிருமாக இருந்து வந்த இருவகைப் புறாக்கூட்டமும் இப்போது ஒன்று கூடி வேறொரு இடம் தேடி புறப்பட்டன.


செல்லும் வழியில் ஓரிடத்தில் வெயிலில் உலர்த்துவதற்காக பரப்பப்பட்ட தானியங்களை கண்டதும் அனைத்தும் ஒன்று கூடி தானியங்களை தின்று தீர்த்து விட்டு மரக்கிளை ஒன்றில் அமர்ந்தன.


தானியத்தை உலர்த்தும் பொருட்டு பரப்பி விட்டு சென்ற வேடன் தானிய மணிகள் ஒன்று கூட இல்லாதது கண்டு அதிர்ச்சியடைந்தான்.

தானியங்கள் காயப்போட்ட இடத்தில் புறாக்களின் எச்சம் கிடப்பதை பார்த்து வேடன் என்ன நடந்தது என்பதை ஊகித்தான்.

நாளைக்கு இந்த புறாக்களை எப்படியும் வலை விரித்து பிடித்து விட வேண்டும் என்று முடிவு செய்து அதன்படி மறுநாள் தயார் செய்து வலை விரித்தான்.

அடுத்த நாள் அங்கே வந்த புறாக்கள் தானியத்தைப் பார்த்ததும், அதை உண்ணும் ஆசையில் வேகமாக தரையிறங்கி உண்ணத் தொடங்கின. சில மணித்துளிகளில் அதன்





கால்கள் வலைகளில் சிக்கிக் கொண்டன.

சற்று தொலைவில் மறைந்திருந்த வேடன் நிலைமையை நன்கு புரிந்து கொண்டு புறாக்களை பிடிக்க ஓடி வந்தான்.

வேடன் வருவதைப் பார்த்த புறாக்கள் ஆபத்தை உணர்ந்து கொண்டு, உயிர் மீதுள்ள ஆசையினால் புறாக்கள் எல்லாம் ஒன்றாக இறக்கையை விரித்து பறக்க, வலையோடு புறாக்கள் பறக்க ஆரம்பித்தன.

(தொடரும்)

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## பிரமிக்க வைத்த போரஸ்

111



விடிந்தால் தொடங்கப் போகிற யுத்தத்திற்காக இருதரப்பு பாசறைகளிலும் தீப்பந்தங்கள் கொளுத்தப்பட்டு வியூகங்கள், அவை குறித்த ஆலோசனைகள் எல்லாம் நடந்து கொண்டிருந்தன.

புருஷோத்தமரின் படையில் முப்பதாயிரம் காலாட்படைவீரர்கள். நான்காயிரம் குதிரைகள், முந்நூறு தேர்கள், இருநூறு யானைகள். இவற்றில் தேர்ப் படையும் யானைப் படையும் புருஷோத்தமருக்கு முதுகெலும்பு போன்றவை.

கடந்த காலங்களில் நடந்த யுத்தங்களில் இந்த இரண்டின் உதவியோடுதான் அத்தனை வெற்றிகளை ருசிக்க முடிந்தது புருஷோத்தமரால். அலெக்சாண்டருக்கு குதிரைப் படை என்றால் இவருக்கு யானைப் படை.

புருஷோத்தமரின் படை அணிவகுப்பு இப்படித்தான் இருந்தது. முன்வரிசையில் யானைப்படை, பின் வரிசையில் காலாட் படை, காலாட்படைக்குப் பாதுகாப்பாக அதன் இருபுறங்களிலும் குதிரைப் படைகள். ஒரு யானையின் மீது கம்பீரமாக மன்னர் புருஷோத்தமர் அமர்ந்திருந்தார்.

போரஸின் வியூகம் அலெக்சாண்டருக்கு பிரமிப்பை ஏற்படுத்தியது. வியூகத்தை உடைக்க வேண்டுமானால் அதிகம் செலவழிக்க வேண்டியது ஆயுதங்களை அல்ல, மூளையைத்தான் என்பது அலெக்சாண்டருக்குப் புரிந்து விட்டது.

அவர் தன்னுடைய படையில் 32500 காலாட்படை வீரர்களையும் 7300 குதிரைப் படையினரையும் வைத்திருந்தார்.

இருபுறமும் வீரர்கள் கூட்டம். போர் முரசுகள் அதிர்ந்தன. முரட்டு யானைகள் ஆக்ரோஷம் பொங்க துதிக்கைகளைச் சுழற்றிக் கொண்டு நின்றன.

குதிரைகள் முன்னங்கால்களை உயர்த்திக்கொண்டு, கனைத்து பயமுறுத்திக் கொண்டிருந்தன. தேர்ச் சக்கரங்கள் பாய்வதற்குத் தயாராக தடதடத்துக் கொண்டிருந்தன.

இந்தப் பக்கம் அலெக்சாண்டரும் அந்தப் ப்க்கம் புருஷோத்தமரும் உத்தரவுகளைப் பிறப்பித்தனர். இரு படைகளும் உக்கிரத்துடன் மோதிக் கொண்டன.

(தொடரும்)

எழுந்து நில்லுங்கள். தைரியமாயிருங்கள். பலமுடைய ராகுங்கள். முழுப் பொறுப்பையும் உங்கள் மீதே சுமத்திக் கொண்டு உங்களது சொந்த விதியைப் படைத்தவர் நீங்களே என்பதை அறியுங்கள்.--விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இதை நாமல்லவோ செய்தோம் என்று மக்கள் சொல்வார்கள்!

பொதுநலவாதிகளுக்கு ஜேம்ஸ் யென் என்ற அறிஞர் ஒரு முக்கியமான அறிவுரையை வழங்கினார்.

அவர் கூறிய அந்த அறிவுரை;

மக்களைத் தேடிச் செல்லுங்கள். அவர்கள் மீது அன்பு செலுத்துங்கள். அவர்களோடு சேர்ந்து திட்டமிடுங்கள். அவர்களுக்காகப் பணியாற்றுங்கள். பணி முடிந்ததும் இலக்கை அடைந்ததும் இதை நாமல்லவோ செய்தோம் என்று மக்கள் சொல்வார்கள்.

ஆம், ஜேம்ஸ் யென் என்ற அந்த அறிஞர் கூறிய கருத்தை எங்கள் மண்ணில் நடந்த பேரணியில் காண முடிந்தது.

இந்தப் பேரணியை யார் நடத்தினார்கள் என்று தெரியாதவாறு மக்கள் எழுச்சி கொண்டு எழுந்தபோது அது மக்கள் எழுச்சியாக - மக்கள் புரட்சியாக மாற்றம் பெற்றது.

இங்குதான் எவரும் உரிமை கோராமல் தமிழ் இனத்தின் மீது கொண்ட அன்பின் காரணமாக, தமிழ் மக்களோடு சேர்ந்து திட்டமிட்டதால், நினைத்தும் பார்க்க முடியாத மாபெரும் மக்கள் பேரணி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நடந்தேறியது.

பேரணியின் விளைவு என்ன என்பதற்கு இங்கு அவசியமும் அவசரமும் தேவையில்லை.

மாறாக, எங்கள் தமிழ் மக்கள் தாமாக முன்வந்து பேரணியில் இணைந்து இந்தப் பேரணியை நாமல்லவோ செய்தோம் என்று கூறியபோது அதுதான் பேரணியின் பெரு வெற்றி என்பது உணரப்பட வேண்டும்.

இவ்வாறு பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடந்தேறிய பேரணி, பேரெழுச்சி கொள்வதற்கு அனைத்துத் தமிழர் தரப்புகளும் ஒற்றுமையாக ஒன்றுபட்டு ஒரே இலக்கில் பயணித்தமையே மூல காரணம் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

எனவே பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரெழுச்சி கொண்ட பேரணியானது தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டது என்பதே வரலாற்றுப் பதிவாகும்.

இருந்தும் ஒரு சிலர் பேரணிக்கு உரிமை கோர முற்பட்டிருப்பதைக் காணமுடிந்தபோது மனம் நொந்து கொண்டது.

பேரணியின் இறுதிக் கட்டத்தின்போதும் அதன்பின்பான அறிக்கையிடல்களின் போதும் சிலர் பேரணிக்கு உரிமை கோருகின்ற அடையாளங்கள் தெரிந்தன.

இத்தகைய அடையாளங்கள் தவிர்க்கப்படுவது எதிர்காலத்திலும் தமிழினம் ஒற்றுமையாகப் பயணிப்பதற்கு மிகவும் அவசியமானதாகும்.

ஆக, விமர்சனங்கள், விளக்கங்கள் என்பவற்றைத் தவிர்த்து இதை நாமல்லவோ செய்தோம் என்று நம் தமிழ் மக்கள் கூறுகின்ற சூழமைவை ஏற்படுத்துகின்ற பக்குவ நிலைக்கு அனைத்துத் தரப்பினரும் வர வேண்டும்.

அதுவே எமக்கு வலிமை தரும்; உரிமை தரும்.

## ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை கூடவுள்ள நிலையில்
# பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டம்
# எரியும் தீயில் எண்ணெய் வார்ப்பது போலுள்ளது

(கொழும்பு)

**புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொண்டே, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்றன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற போராட்டங்கள் குறித்து தொலைக்காட்சி நிகழ்வொன்றில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த சில நாட்களாக நடைபெற்ற இவ்வாறான போராட்டங்கள் ஒரு சில தரப்பினரின் குறுகிய நோக்கத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில், எரியும் தீயில் எண்ணெயை வார்ப்பது போல இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார்.

இதேநேரம் இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பதால் இது போன்ற ஆர்ப்பாட்டங்கள் ஏற்கத்தக்கவை என்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா குறிப்பிட்டார்.

இருப்பினும் கொரோனாத் தொற்றின் தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு சுகாதார நடைமுறைகளை மீறியவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

# இலங்கையை சர்வதேச நீதிமன்றத்திற்கு எடுத்துச்செல்லும் வாய்ப்பு அதிகமுள்ளது

(கொழும்பு)

ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளரின் அறிக்கையை அடிப்படையாக வைத்து சர்வதேச அமைப்புகள் இலங்கையை சர்வதேச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதற்கான வாய்ப்புள்ளது என எச்சரிக்கை விடுத்துள்ளார் இலங்கையின் மனித வுரிமை ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் பிரதீப் மகாநாமஹேவா.

எனவே ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் தீர்மானத்தை எதிர்கொள்வதற்கு இந்தியாவின் ஆதரவு மிகவும் முக்கியமானது எனவும் அவர் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில்கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானங்களுக்கு எதிராக இடைக்கால யோசனையொன்றை முன் வைக்கலாம்.

அவ்வாறான சூழ்நிலையில் இந்தியாவின் ஆதரவு இலங்கைக்கு மிகவும் அவசியமானது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளரின் அறிக்கையை எதிர்ப்பதை நானும் விரும்புகின்றேன்.

அந்த அறிக்கை நாட்டில் தற்போது காணப்படும் நிலைமைக்கு முரணானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவை இலங்கைக்கு எதிராக தீர்மானமொன்றை முன் வைத்தால் அதனை எதிர்கொள்வதற்கான திட்டம் அவசியம் என தெரிவித்துள்ள அவர் இலங்கையில் மனிதவுரிமை நிலவரத்தை முன்னேற்றுவதற்கான திட்டமும் அவசியம் என குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** புதியசின்னக்குளம் கிராமம், ஜோசப் இராணுவ படை முகாம், **SFHQ Vanni**, விமானப்படை முகாம், விமானப்படை முகாம் றேடார், குடாகச்சக்கொடிய கிராமம், பாவற்குளம் கிராமம், அவறந்துலாவ கூமாங்குளம் கிராமம், ஓமந்தை வீட்டுத்திட்டம், **Senok**, தொழில் நுட்பக்கல்லூரி, **Union Alleiance** ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்**சின்னதம்பனை, வீரபுரம், கெலசியம்பலாவ, பெரிய நொச்சிக்குளம், கற்கிடந்தகுளம், சின் னசிப் பிக் குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## மனிதனும் தெய்வ வடிவமே

❖ கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார், இதைத்தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை, இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கின்றேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்.

❖ பிறருக்கு செய்ய வேண்டிய கடமை, உதவி புரிவதும், உலகிற்கு நன்மை செய்வதுமாகும். உலகிற்கு நன்மை செய்வதனால், உண்மையில் நமக்கு நாமே உதவி செய்து கொள்கிறோம். தீமையைச் செய்வதனால் நாம் நமக்கும் பிறருக்கும் தீமை செய்கிறோம்.

❖ சிம்மாசனத்தில் வீற்றிருந்து தங்கத்தாலான அரண்மனையில் வாழ்ந்த போதும் அறவே சுயநலம் இல்லாதவனாக இருந்தால், அவன் கடவுளிடமே இருக்கிறான் என்று பொருளாகும். சுயநலமற்ற தன்மையே கடவுள்.

❖ அலைகள் சிறிதாக இருந்தாலும் அவை கடலினின்றும் வேறுபட்டவை அல்ல, கடலின் ஒரு பகுதி ஆகும். அது போல நாமும் மனிதர்களாயினும் தெய்வ சொரூபங்களே.


# நயினை சித்தர் ஸ்ரீமுத்துக்குமார சுவாமிகளின் குருபூசை தினம் இன்று

சித்தர்கள் மனிதன் வகுத்த வரம்புகளையும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் பாகுபாடுகளையும் பாரபட்சங்களையும் கடந்தவர்கள். சித்தர்களுக்கு சாதி, சமய பேதம் எதுவும் இல்லை. அவர்கள்எல்லா உயிர்களிலும் இறைவனைத் தரிசித்தவர்கள்.

நயினாதீவில் ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் நயினாதீவுச் சுவாமிகள் என அழைக்கப்படுபவருமாகிய நயினை ஸ்ரீமுத்துக்குமார சுவாமிகள் ஆறுமுகம் பார்வதி தம்பதியருக்கு ஆறாவது பிள்ளையாக 1896 இல் அவதாரம் செய்தார். இவர் சிறுவயதில் நயினாதீவு தில்லையம்பலம் பாடசாலையில் கல்வி பயின்றார். இளவயதில் இருந்தே இவரிடம் ஆன்மீக நாட்டமும் கவி பாடும் திறனும் இருந்தன. கல்வியில் நாட்டம் குறைந்து ஆன்மீகத் தாகம் மிக்கவராய் மாறி வந்த இவரை தமையனார் கொழும்பில் உள்ள தனது கடைக்கு உதவியாளராக அழைத்துச் சென்றார். இக்காலத்தில் இந்தியாவில் இருந்து வந்த பெரியார் ஒருவருடன் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. இப்பெரியாரே தன்னை ஆள வந்த "சற்குரு" என்பதை அவர் அறியவில்லை.

இவர்கள் இருவருக்கும் இறுக்கமானதொரு ஆன்மீகத் தொடர்பு ஏற்படலாயிற்று. அந்தப் பெரியாரும் முத்துக்குமாருவும் ஒருநாள் திடீரென கதிர்காமத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அங்கு கதிரமலைக்குச் செல்லும் வழியில் ஒரு மரத்தடியில் இருவரும் தங்க நேரிட்டது. அந்தத் தனிமையான சூழலிலும் நிசப்த இடத்தில் முத்துக்குமாருக்கு தீட்சையும் குரு உபதேசமும் கொடுக்கப்பட்டன. முத்துக்குமாரு குருபாத சேவை செய்து ஆத்ம ஈடேற்றத்தைப் பெற எண்ணினார். தன் எண்ணத்தையும் விருப்பத்தையும் குருவானவருக்கு எடுத்தியம்பித் தன்னுடன் தங்குமாறு வேண்டி நின்றார்.

வந்தவேலை முடிந்தது என்று எண்ணிய பெரியவர் ஒருநாள் காலை வெளியில் சென்று திரும்பி வரவில்லை. முத்துக்குமாரரோ தம்மையாட்கொண்ட சற்குருவை எங்கு தேடியும் காணாமல் பித்தர் போல் ஆனார். ஒரு நாள் கிறுக்கல் கவிதை ஒன்றை எழுதி வைத்து விட்டு யாருக்கும் கூறாமல்கடையைவிட்டுச்சென்று விட்டார். முத்துக்குமாரு தன் ஞான குருவைத் தேடி இந்தியா புறப்பட்டுச் சென்றுவிட்டார். தான் தேடிச்சென்ற குருவைக் கண்டார். அவர் நிழலில் பல



வருடங்கள் தங்கி பக்குவ நிலை எய்தினார். அருணாசலக் குகைகளில் சில வருடங்கள் சமாதி நிட்டையில் அமர்ந்திருந்தார்.

சுவாமிகள் தன் இறுதிக் காலத்தில் யாழ்.வண்ணார் பண்ணையில் சிவலிங்கப் புளியடியில் உள்ள தன் அடியார் சிவசுப்பிரமணியம் இல்லத்தில் தங்கியிருந்து அடியவர்களுக்கு அருள் ஆசி வழங்கினார். சுவாமிகள் இயல்பாகவே கவிபாடும் திறமை வாய்ந்தவர். இரவால் பாடப்பெற்றவை நமசிவாய மாலை, நாகேஸ்வரி தோத்திரம், நாகபூஷணி அந்தாதி என்பனவாகும்.

சுவாமிகள் சிவலிங்கப்புளியடியில் சிவசுப்பிரமணியம் இல்லத்தில் சர்வதாரி வருடம் உத்தராயண காலமாகிய தைத் திங்கள் 13 ஆம் நாள் 26.01.1949 புதன்கிழமை இரவு 12 மணிக்கு பத்மாசன மிட்டுத் தியானத்தில் இருப்பது போல் அமர்ந்திருந்தவாறே உலக வாழ்வை விட்டு விதேகமுத்தியடைந்தார்.

**கலாபூஷணம் நயினை நாகமணி கோபாலகிருஷ்ணன்**
**தலைவர், சப்த தீவக திவ்விய ஜீவன சங்க சமாசம்.**

# மியன்மார் பாணியிலான இராணுவ ஆட்சிக்கு முயல்கிறார் கோட்டா - சட்டத்தரணி சிரால்


(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மியன்மார் பாணியிலான இராணுவ ஆட்சிக்கு முயல்வதாக சட்டத்தரணி சிரால் லக்திலக குற்றம் சாட்டியுள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்தலில் வெற்றிபெற்றால் சர்வாதிகார ஆட்சி ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்ட போதிலும் மக்கள் அவருக்கு வாக்களித்தார்கள்.

அரசியல் பழிவாங்கல் குறித்த குழு நாட்டின் சட்டங்களுக்கு



அப்பால் உருவாக்கப்பட்டது என குறிப்பிட்டுள்ள அவர் அரசாங்கம் தனது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக இந்த ஆணைக் குழுவின் அறிக்கையை பயன்படுத்தினால் மோசமான விளைவுகள் ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் குறித்த ஆணைக்குழு நாட்டின் நீதித்துறையின் அடிப்படைக்கே அச்சுறுத்தலாக காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# 3.9 மில்லியன் முறைகேடு

## மகிந்தானந்தவிற்கு எதிரான வழக்கு விசாரணைகள் நிறைவு



(கொழும்பு)

இலங்கை சுதந்திர ஊழியர் காங்கிரஸ் எனப்படும் தொழிற்சங்கத்திற்கு சொந்தமான 3.9 மில்லியன் ரூபாவை முறைகேடாக பயன்படுத்தியதாகக் கூறப்படும் அமைச்சர் மகிந்தனந்த அளுத்கமகேவிற்கு எதிரான வழக்கின் விசாரணைகள் நிறைவடைந்தன.

குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெதிகே முன் விசாரணைக்கு வந்தது.

இதன்போது குற்றச்சாட்டுகளுக்கு போதுமான ஆதாரம் இல்லாததால் தனது கட்சிக்காரரை விடுவிக்குமாறு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவின் சட்டத்தரணி நீதிமன்றில் கோரியிருந்தார்.

இதனை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்கு தொடர்பான தீர்ப்பை எதிர்வரும் பெப்ரவரி 25 ஆம் திகதி வழங்குவதாக அறிவித்தார். (நி-4)

# மார்ச் மாதம் தொடக்கம் எல்லா மக்களுக்கும் தடுப்பூசி



(கொழும்பு)

இலங்கையில் மார்ச் மாதம் முதல் வாரத்திலிருந்து சாதாரண மக்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி முதற்கட்டமாக 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் 30 வயதிலிருந்து 60 வயதிற்கு இடைப்பட்ட பிரிவினருக்கும் கொரோனாத் தடுப்பூசி வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். (நி-4)

# 93 வயதில் பரீட்சைக்கு தோற்றிய மூதாட்டி

(கண்டி)

93 வயதான மூதாட்டியொருவர் கண்டியில் நடந்த தஞ்சரி பிடக தம்மம் மற்றும் பாளிமொழி பரீட்சையில் தோற்றியுள்ளார்.

கண்டி சேனநாயக்க கல்லூரியில் கடந்த 6, 7 ஆம் திகதிகளில் இந்தப் பரீட்சைகள் இடம்பெற்றன.

இந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு களனி பல்கலைக் கழகத்தில் முதுகலை தேர்வு எழுதத் தகுதியுடையவர் என்றும் இறப்பதற்கு முன் தேர்வில் தேர்ச்சி பெறுவதே தனது நோக்கம் என்றும் 1928 இல் பிறந்த விதானகே லீலாவதி அஸ்லின் தர்மரத்ன தெரிவித்தார்.

பரீட்சை மண்டபம் மாடி வகுப்பறையில் இருந்தது. எனினும் மூதாட்டி மாடிப்படியேற முடியாததால் அவருக்குக் கீழே பிரத்தியே இடம் தயார் செய்யப்பட்டிருந்தது. (நி-4)

# பதுளையில் சடுதியாக அதிகரிக்கும் கொரோனாத் தொற்றாளர்கள்

(பதுளை)

பதுளை மாவட்டத்தில் நேற்று முன்தினம் மட்டும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 197 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இரு ஆடைத்தொழிற்சாலைகளும் மறு அறிவித்தல் வரை உடன் மூடப்பட்டுள்ளன.

கடந்த வருட ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி முதல் இதுவரையில் பதுளை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மொத்தமாக 584 பேர் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட கொவிட்-19 தடுப்பு செயலணியினர் தெரிவித்துள்ளனர்.

பதுளையில் ஐந்து கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு பசறை, பண்டாரவளை, தியத்தலாவை, ரிதிமாலியத்தை, மகியங்கனை, வெலிமடை போன்ற இடங்களிலேயே கொரோனா தொற்றாளர்கள் பலர் இனங் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் பதுளை மாவட்ட கொவிட்-19 தடுப்பு செயலணியினர் தெரிவித்தனர்.

அத்துடன் பதுளை மாவட்டத்தில 617 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடதக்கது. (நி-4)

# 35 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு தொற்று

(அம்பாறை)

அம்பாறை, பஹலலந்த முகாமில் 35 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக கொவிட்-19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (நி-4)

## 1000 ரூபாய்...

அதற்கமைய நாளாந்த அடிப்படைச் சம்பளமாக 900 ரூபாயும் மேலதிக கொடுப்பனவாக 100 ரூபாயும் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, 1000 ரூபாய் நாளாந்த கொடுப்பனவை வழங்குவதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் மாதத்தில் 13 நாட்கள் மாத்திரமே வேலை வழங்கப்படுமென்ற கடுமையான நிபந்தனையையும் முன்வைத்துள்ளன. (ம-3)

## 9 இந்திய மீனவர்...

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.ஜூட்சன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை, இந்தியாவிற்கு அனுப்பி வைப்பதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடம் ஒப்படைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-3)

## யாழில் முதலா...

உயிரிழந்த குறித்த நபர் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் ஸ்ரோக் நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கடந்த மாதம் மாற்றப்பட்டார்.

அவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நிலையில் கோவிட் - 19 தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்தில் அனுமதித்து சிகிச்சையளிக்கப்பட்டது.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார்.

அவரது சடலம் கோவிட் - 19 சுகாதார கட்டுப்பாடுகளுக்கு அமைய உறவினர்கள் சிலரின் பங்கேற்புடன் மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது" என்றும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## யாழில் நேற்று...

கள் செய்யப்பட்டுள்ளன.

அவர்களில் வட மாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ம-3,18)

## யாழ்.பல்கலைக்...

விழா இம்மாதம் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இரண்டு நாட்களிலும் ஆறு அமர்வுகளாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் உயர் பட்டப்படிப்புகள், உள்வாரி, வெளிவாரி என 2 ஆயிரத்து 608 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர் என்று யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,33)

## விசேட அதிரடிப்...

சுமந்திரனின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அதிரடிப் படையினர் திடீரென மீளப்பெறப்பட்டுள்ளனர் .

நேற்றிரவு (நேற்று முன்தினம்) வழங்கப்பட்ட திடீர் பணிப்பில் சிறப்பு அதிரடிப் படைப் பாதுகாப்பு மீளப்பெறப்பட்டுள்ளதாகவும், காரணம் இன்னும் அறிவிக்கப்படவில்லை எனவும் எம்.ஏ.சுமந்திரன் நேற்று தெரிவித்தார்.

எனினும், பிரமுகர் பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு பாதுகாப்புக் கடமையில் இருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறப்பு அதிரடிப் படையினரை வைத்து பேரணியில் பங்கேற்றமை உள்ளிட்ட சில நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கே இவ்வாறு மீளப்பெறப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3,18)

## கோட்டா தலை...

என்பது தொடர்பாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இன்று பி.ப 12 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உயர்மட்ட அமைச்சர்கள் சிலரும் இக்கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர். (ம-3)

## 9 பேர் பலி...

றுக்கு உள்ளாகி மேலும் 09 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 365 ஆக அதிகரித்துள்ளது.(ம-3)

## உச்ச அதிகார...

உங்கள் கருத்து என்ன?

**பதில்:** நான் எனது உரைகளில் தொடர்ச்சியாக கூறி வந்ததே இன்றைக்கு இந்தியாவுக்கு நடந்துள்ளது. அன்று தொட்டு இன்றுவரை இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்து வரும் அரசாங்கங்கள் இந்தியாவை ஏமாற்றியே வந்துள்ளன.

அதன் தொடர்ச்சியே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விடயத்தில் நடந்துள்ளது. ஜெனிவா மனித உரிமைகள் சபை கூட்டத் தொடர் முடிவடைந்த பின்னரே இது நடைபெறும் என்று எதிர்பார்த்தேன்.

ஆனால், அது சற்று முன்னதாகவே நடந்துவிட்டது. யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள மூன்று தீவுகளை இலங்கை அரசாங்கம் சீன நிறுவனமொன்றுக்கு மின் திட்டங்களை ஆரம்பிக்க வழங்க இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இது மிகவும் பாரதூரமான ஒரு விடயம்.

இனியாவது இலங்கைத் தீவில் நிரந்தர நம்பிக்கைக்குரிய தரப்பாக இந்தியா தமிழ் மக்களைக் கருதி அவர்களின் தாயகமான வடக்கு - கிழக்கில் அவர்களின் அதிகாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதை மையப்படுத்தி தனது கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன். இந்தியாவின் தென்கோடி பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் உச்சபட்ச அதிகாரப் பகிர்வுடன் ஆட்சி செய்ய வேண்டும்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ் மக்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றினை தமிழ் மக்களே தெரிவு செய்யும் வகையில் சர்வதேச சமூகத்தினால் வடக்கு - கிழக்கில் பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான நடவடிக்கையை இந்தியா தலைமை ஏற்று நடத்த முன்வரவேண்டும். கிழக்கு முனை விடயத்தில் நடந்ததே நாளை 13ஆவது அரசியல் திருத்த விடயத்திலும் நடக்கும். ஒற்றை ஆட்சியின் கீழான எந்தத் தீர்வுக்கும் இந்த நிலைமையே ஏற்படும் என்பதை இந்தியா உணர்ந்து கொள்ள வேண்டும்.

1987ஆம்ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்போது இந்திய மாநிலங்களுக்கு வழங்கும் அதே உரிமைகளை இலங்கையின் மாகாணங்களுக்கு வழங்க வேண்டும் என்றே பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன.

ஆனால் ஜே.ஆர் அவற்றை எல்லாம் மாற்றி ஒரு உருப்படாத 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அவர் பின்வந்த ஆர்.பிரேமதாஸ அதற்கு ஒரு படி மேலே போய் அரசாங்க அதிபர், மாவட்ட செயலர், கிராமசேவகர் ஆகியோரை மாகாண அதிகாரத்தின் கீழிருந்து பிரித்தெடுத்து மத்திய அரசின் அதிகாரத்துக்குக் கீழ் கொண்டு வந்தார். வலுவற்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தில் கொடுத்த சொற்ப காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கூட இதுவரையில் எந்த சிங்கள அரசாங்கமும் தரவில்லை. சிங்கள அரசாங்கங்கள் கயிறு கொடுப்பதில் மன்னாதி மன்னர்கள். இதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்.

தங்கள் காரியம் முடியும் வரையில் காலைப் பிடிப்பார்கள். அதன் பின் கழுத்தைப் பிடிப்பார்கள்.

இந்தியாவும் இலங்கைத் தமிழ் மக்களும் ஒருவருக்கொருவர் உதவியாக இல்லாவிட்டால் இருவருக்குமே அதோ கதிதான்! என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தமிழ் மக்களின்...

தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுப் பொலிஸாரால் ஏற்கெனவே தடையுத்தரவு பெறப்பட்டிருந்த AR வழக்குகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு புதிய B அறிக்கையிலான வழக்குகள் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையிலான போராட்டத்தை நடத்தியவர்களிற்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த B அறிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், துரைராசா ரவிகரன் உள்ளிட்டோரின் பெயர்கள், மதத் தலைவர்களின் பெயர்களும் சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ம-3)

## தமிழர்களின்...

சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்களின் நீதிக்கான பேரணி தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ம-3)































**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (5577)

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

**பணிப்பெண் தேவை**

வயோதிபப் பெண்ணொருவரை இரவு, பகல் நின்று பராமரிக்கக் கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு (5580)

077 820 1195, 075 041 3579

# கொரோனாவால் முதலாவது பொலிஸ் அதிகாரி மரணம்

(கொழும்பு)

மொனராகலை பொலிஸ் பிரிவின் பிரதி பொலிஸ் அதிகாரியொருவர் கொவிட் - 19 தொற்றால் உயிரிழந்துள்ளார்.

59 வயதான குறித்த நபருக்கு கடந்த 3ஆம் திகதி திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் மொனராகலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளார்.

மேலும், இலங்கை பொலிஸில் முதலாவது கொவிட் - 19 மரணம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கண்ணீர்க் காணிக்கை



எமது நண்பன் த. தனேந்திரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர் - ஆங்கிலம், தர்காநகர் தேசிய கல்வியற் கல்லூரி)
அவர்களின் அன்புத் தாயார்

### பரமேஸ்வரி தனபாலன்

பிறப்பு 11.04.1945

இறப்பு 08.02.2021

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(5584)

நல்லூர் நண்பர்கள்

**கடை வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்தி அருகாமையில் ஒரு கடை வாடகைக்கு உண்டு.

(50 அடி நீளம் 18 அடி அகலம்)

தொடர்பு (5587)

077 805 1655

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK-1000/=Kg (C-1356)

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-1374)

0768226240 DHL

**அண்ணா** EXPRESS Courier Service

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள் (C-1357)

லண்டன் 1000/= 070 3305500 075 3305500


976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

## மரண அறிவித்தல்



### கந்தையா சுப்பிரமணியம்

வரணியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று (08.02.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைரமுத்து - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் மோகனாம்பிகையின் அன்புக் கணவரும் தர்மேந்திரா (தர்சா சவுண்ட்ஸ் உரிமையாளர்), பத்மரூபி, கஜரூபி (ஆசிரியை - யா/ புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்), தர்ஷரூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, இராமநாதன், வேலாயுதம், யோகநாதன், விக்னேஸ்வரன், இந்திராணி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வன்னியசிங்கம், கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் சிறிகரனின் அன்பு மாமனாரும் மதுமி, சந்தியா, மதுஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.02.2021) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (5581)

V.H லேன்.
இருபாலை கிழக்கு. கோப்பாய்.

077 622 1381

தகவல்:-
தர்மேந்திரா மகன்
( தர்ஷா சவுண்ட்ஸ் )

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 – 08 – 1953



இறப்பு 08 – 02 – 2021

### கந்தையா தனபாலசிங்கம்

பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் சந்நிதி வீதி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் நேற்று (08.02.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பவளம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, பூபாலசிங்கம் மற்றும் புஸ்பராணி, தனலட்சுமி, சிவனடி, சிறிஸ்கந்தராஜா, மகேஸ்வரன், கிளி அக்கா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அரவிந்தமலர், கந்தசாமி (துரை), சின்னத்துரை (பத்தமேனி), சின்னத்துரை (நவக்கிரி) மற்றும் புலேந்திரன், தயாவதி (பிரான்ஸ்), சிவாஜினி (கனடா), காமினி (கனடா), திருவருள்நாதன் (சுவிஸ்), இலட்சியநாதன், வேலருள் (சுவிஸ்), சேரங்கன் (கனடா), காலஞ்சென்ற தனமலர் (அத்தா) மற்றும் ரவீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சயந்தன் (பிரான்ஸ்), சஜீவன் (ஜேர்மனி), சாருதன் (பிரான்ஸ்), சங்கீதன் (பிரான்ஸ்), சர்மிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நளாயினி, றஞ்சினி, யாழினி, சர்மிளா, சிவசாந்தினி ஆகியோரின் மாமனாரும் றெனிசன், சஞ்சீவ், சாகித்தியன், அபிசாந்த், அக்சித், அஸ்விகா, நிதுன், மகிழினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.02.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தீத்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (5586)

சந்நிதி வீதி.
அச்சுவேலி.

077 177 0707

தகவல்:-
பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.